பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
அன்பளிப்பு [illegible]

விலை ரூபா 2.00 ★ 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 27 கார்த்திகை 16 ரபி-அவ் 18 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (1—12—85) இதழ் 294

## கொழும்பு சென்ற ரயில் 'வாகனி'லிருந்து 260 பாக்கெட் சீமெந்து அபேஸ்!

(வவுனியா)

காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் ரயில் வாகன் ஒன்றிலிருந்து 260 பாக்கட் சீமெந்து கொள்ளையிடப்பட்டுள்ளது.

அந்த ரயில் வாகன் பழுதடைந்ததையடுத்து புளியங்குளத்தில் பழுது பார்ப்பதற்காக அது நின்றிருந்தபோதே வாகனங்களில் வந்த சுமார் 15 பேர் கொண்ட கோஷ்டி இந்த சீமெந்து பக்கட்டுக்களை துப்பாக்கி முனையில் மிரட்டிக் (12-ம் பக்கம் பார்க்க)

# ● ரயிலில் அபகரித்த மருந்து வகைகள் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு!

(ஏ வி மாணிக்கம்)

மன்னார் ரயில் நிலையத்தில் வைத்துக் கொள்ளையடிக்கப்பட்ட ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான - வடபகுதி அரசினர் ஆஸ்பத்திரிகளுக்கான அத்தியாவசிய மருந்து வகைகளை நேற்றுக்காலை யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இது குறித்து ஆஸ்பத்திரி வட்டாரங்களிலிருந்தும், பொது மக்களிடமிருந்தும் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

வடபிராந்திய சுகாதார சேவை அத்தியட்சகரின் அலுவலகத்துக்கு கடந்த சனிக்கிழமை கொழும்பிலிருந்து வந்த சரக்குவண்டியில் 61 பெட்டிகளைக்கொண்ட மருந்து வகைகள் கொள்ளையடிக்கப்பட்டது தெரிந்ததே.

இம் மருந்துவகைகள் கொள்ளையடிக்கப்பட்டதால் யாழ் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரி நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவரென்றும் இக் கொள்ளையை நடத்தியவர்கள் மீண்டும் இம்மருந்துகளை ஒப்படைக்கும் படியும் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்திருந்தார் [12ம் பக்கம் பார்க்க]

நாளை 2ந் திகதி சமரசப்பேச்சு மீண்டும் ஆரம்பம்!

★ லலித் தலைமையில் உயர் மட்டக்குழு இந்தியா பயணம்!

★ தமிழ்க் குழுக்களின் நிலையை விளக்கும் மகஜர் த வி கூ தயாரிப்பு!

# ஈதேவிமு பங்குபற்றாது; தவிகூ புளொட் நிலையில் குறுக்கீடு இல்லை

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்னை குறித்த சமரசப் பேச்சுக்கள் நாளை இரண்டாந் திகதி மீண்டும் ஆரம்பமாகவுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. இப் பேச்சுக்களில் கலந்து கொள்ளவென இலங்கை தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தலைமையில் உயர் மட்டக்குழுவொன்று இந்தியா பயணமாகிறது. 'ஈழத்தேசிய விடுதலை முன்னணி' இப்பேச்சில் தான் கலந்துகொள்ளப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளது. ஆயினும் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் ஆகியன இதில் கலந்துகொள்வதைத்தடுக்கப் போவதில்லையென அதுமேலும் தெரிவித்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) விரும்பினால் இலங்கை அரசுடன் பேச்சுக்களை நடத்தலாம், ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியோ அல்லது எந்தக் குழுவோ ஈழ தேசிய விடுதலை முன்னணியின் சார்பில் இலங்கை அரசுடன் பேச்சுக்களை நடத்தவேண்டிய அவசியமில்லை.

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் வாயிலாக இலங்கை அரசுடன் பேச்சு நடாத்த ஈழதேசிய விடுதலை முன்னணி விரும்புவதாய் இந்திய உயர் ஸ்தானிகர் திரு. டிக்சித் இலங்கையில் கூறியது குறித்து விளக்கமளிக்கையிலேயே ஈழ தேசிய விடுதலை முன்னணி சார்பில் அதன் பேச்சாளர் வி. பாலகுமார் சென்னையில் நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அப் பிரதிநிதி தொடர்ந்து கூறியதாவது!

இந்திய அரசு மேற்கொண்டுள்ள சமாதான வழிமுறைகளுக்கு ஈ. தே. வி. இடையூறாக இருக்கமாட்டாது.

இலங்கை அரசுடன் இதுவரை நடைபெற்ற பேச்சுக்களின்போது தெரிவிக்கப்பட்ட யோசனைகள் எதனையும் நாங்கள் ஏற்கவில்லை.

(12-ம் பக்கம் பார்க்க)

## மட்டுவிலிருந்து யாழ் வந்த 15 பஸ் பயணிகள் கைது!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும், வெருகலுக்கும் புறப்பட்ட பஸ்களில் இருந்தவர்களை ஆயுதப்படையினர் சோதனை செய்த பின்னர் 15 பேர் கல்லடி முகாமுக் (12 ம் பக்கம் பார்க்க)

## திருவையாறில் வீடுமுற்றுகை 4 இளைஞர்கள் பலி!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகருக்கடுத்ததாக உள்ள திருவையாறு கிராமத்தில் ஆயுதப்படையினரால் வீடு சென்று முற்றுகையிட்டபோது இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் நால்வர் பலியாகியுள்ளனர். இதே வேளை இரணைமடுச்சந்தி (12-ம் பக்கம் பார்க்க)

## தலைமையகத்திலிருந்து தப்ப முயன்ற இருவர் சுடப்பட்டு மரணம்!

(கொழும்பு)

கொழும்பு இராணுவத் தலைமை அலுவலகத்திலிருந்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தீவிரவாதிகள் இருவர் தப்பியோட முயற்சிக்கையில் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 3-30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

காலிமுகத்திடலில் இந்த தலைமை இராணுவமுகாம் உள்ளது தெரிந்ததே.

12-ம் பக்கம் பார்க்க)

## தினேஷ் சகோதரர் தமிழ் தீவிரவாதிகளுடன் தொடர்பு? நீதிமன்றில் ஆட்கொணர்வு மனு!

(கொழும்பு)

கடந்த வாரம் கொழும்பில் கைதான 41பேரில் ஒருவர் மகரகம எம். பி திரு தினேஷ் குணவர்த்தனாவின் மூத்த சகோதரரான இந்திகா குணவர்த்தனா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தீவிரவாதக் குழுக்களுடன் தொடர்புடையதாகவே இந்த 41 பேரும் கைதானார்கள்.

இந்திகா குணவர்த்தனா சார்பில் ஆட்கொணர்வு மனுவொன்றை அவரது மனைவி டாக்டர் திருமதி. பிரட்றிஸ் பத்மினி குணவர்த்தனா மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

இம் மனுவை ஆராய்ந்த நீதிமன்றம் இம் மாதம் 18 ம் திகதி புலனாய்வுத்துறை இயக்குனர் ஐ ஜி பி, சட்டமா அதிபர் ஆகியோரை நீதி மன்றத்தில் ஆஜராகும்படி அறி (12-ம் பக்கம் பார்க்க)

## சவூதி அரேபியாவில் வேலைவாய்ப்பு

கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் உடனடியாகக் கோரப்படுகின்றன

| பதவி | வெற்றிடங்கள் |
|---|---|
| Agricultural Forman | 4 |
| Agricultural Labourers | |
| Electrical Technician | 12 |
| Mechanical Technician | 19 |
| Plumbers | 12 |
| Telephone operators | 12 |
| Telex operators | 4 |
| Maintanance Forman | 4 |
| Mail distributors | 4 |
| Accounts clerks | 4 |
| Store Keepers | 4 |
| Ironing Laboureis | 12 |
| Laundry Labourers | 12 |
| Laundry Forman | 4 |

★ அநுபவம் உள்ளவர்கள் மட்டும் உடனடியாகக் கீழ்க்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.

முகவரி:- K. கந்தசாமி, 7ம் கட்டை
மெயின் வீதி, சங்கானை

R. P. A. Personnel Recruitment Authority
Labour Licence No 414
Approval No. A/414/1/85 (2096)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

வீடு வளவு உட்பட இரண்டு பரப்பு காணி மின்சார வசதியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்; ஊர் மகாதேவன்' அருகாமைத் தம் ஒழுங்கை, சங்குவேலி, மானிப்பாய். (2023)

---

நல்ல நிலையில் குறைந்த விலையில் (Incu bater) இன்குபேட்டர் விற்பனைக்கு உண்டு. ஒரே முறையில் 100 கோழிக் குஞ்சுகளைப்பெறலாம் எல்லா நாட்களிலும் பார்வையிடலாம். இல. 1, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். (2043

---

புதிய Technics 4 Band Stereo Cassette Receiver S A 3705 விற்பனைக்குண்டு தொடர்பு: T பொன்னம்பலம், அமெரிக்கன் மிசன் பாடசாலைக்கு அருகாமையில், வல்வெட்டித்துறை (2014)

---

விரும்பிய நிறங்களில் (Love Birds லவ் பேட்ஸ் விற்பனைக்குண்டு. சோ: வரதராசா, கிளன் ஒழுங்கை ஆவரங்கால். 2080

---

வீட்டுப் பாவனைப் பொருட்கள் விற்பனைக்கு உண்டு நேரில் பார்வையிட்டு விலைகளைத் தீர்மானிக்கலாம் த. செல்லக்கண்ணு பரமேஸ்வரா ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு. 2059

---

அச்சகம் அமைப்பதற்குரிய அச்சியந்திரம் உட்பட சகல உபகரணங்களும் புத்தகசாலையும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க 419, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2064

---

கெல்லூட் சினிமா, ரைஸ் குக்கர் (நஷனல்) சாப்பாட்டு மேசை Dinning) கதிரைகளுடன் வீட்டுப் பாவனைப் பொருட்களும். 669. கே கே. எஸ் ரோட், யாழ்ப்பாணம். 2074

---

விதை வெங்காயம் (சின்னது) முந்திரிகைப் பழம் மொத்தமாக விற்பனைக்குண்டு. ஆனந் வண்ணை, மயிலிட்டி - கட்டுவன் வீதி, மயிலிட்டி-வடக்கு. 2080

---

தூய வெள்ளை நிற பொமரேனியன் 7 மாதக் குட்டிகள் சோடியாகவும் மன்னிற 1 வருட பெண் நாயும் விற்பனைக்குண்டு தொடர்பு: ரேவதி விஜயபோஸ், பிரதான வீதி, இளவாலை. 2093

---

நல்ல நிலையில் பாவித்துக் கொண்டிருக்கும் குளிர் சாதனப்பெட்டி Sisil DeepFreezer) விற்பனைக்குண்டு. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம். ராஜா, 21, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். 2083

## தேவை

நல்ல நிலையில் உள்ள A-35 கார் தேவை; தொடர்பு: வை: கனகசபாபதி, 180, வைத்தீஸ்வரக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். (2042)

---

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் கல்வி நிலையமொன்றில் (6-10) வகுப்புகளில் சமூகக்கல்வி, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கான பகுதி நேர ஆசிரியர்கள் தேவை. வயது, தகுதி, அனுபவம் போன்ற விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 2034, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2034

## தேவை

யாழ். மாநகர சபை எல்லைக்குள் மின்சாரம், நீர் மற்றும் சகல வசதிகளோடும் கூடிய ஐந்து அறைகளுக்குக் குறையாத விசாலமான வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு கொள்ளவும்: விளம்பர இல: 2033, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 2033

---

தனியார் மருத்துவ மனைக்கு 25 வயதுக்குட்பட்ட பெண் மருந்து கலவையாளரும், பயிற்றப்பட்ட தாதியும் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் 1-12-85 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கும் பி. ப 5.00 மணிக்கும் இடையில் நேரில் வரவும். மெடிக்கல் கிளினிக், இல 88, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. 2078

---

புடவைக் கடை ஒன்றிற்கு 8 அடி நீளமான கண்ணாடி அலுமாரி ஒன்று தேவை; தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கோகுலா ரேடர்ஸ், பாரிகாரு மெயின் வீதி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. 2088

---

சிமாட்டி பாயில் கோழி பராமரிப்பதிலும் தோட்ட வேலையில் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். சிமாட்டி, 122, பலாலி ரோட், யாழ்ப்பாணம். 2086

---

யாழ்நகரிலிருந்து ஐந்து மைல் சுற்றுடலில் உள்ள ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு இரண்டு அல்லது மூன்று வருடத்திற்கு மேற்பட்ட தையல் அனுபவமுள்ள பெண் மேற்பார்வையாளர் (Lady Supervisor) தேவை. உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2060, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 2060

## மணப்பந்தல்

யாழ்ப்பாண இந்துவேளாள குல B. A (நிறைமதிநிதி) ஆசிரியைக்கு 33 வயதுக்குட்பட்ட செவ்வாய்க் குற்றமற்ற மணமகன் தேவை. ஒரு பட்டதாரி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியராயினும் விரும்பத்தக்கது வீடு, ரொக்கம், நகை எல்லாமாக பன்னிரண்டு லட்சத்துக்குக் குறையாமல் வழங்கப்படும். குறிப்புடனும் முழு விபரங்களுடனும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 2089, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம் 2089

---

ரோமன் கத்தோலிக்க வேளாள குலத்தைச் சேர்ந்த 32 வயதுடைய யாழ் நகரில் சொந்த வீடு வளவுள்ளவரும், வெளிநாட்டில் நிர்வாகக் காரியதரிசியாக உயர் பதவி வகித்து லீவில் வந்துள்ளவருமான மணமகனுக்கு பதுத்த, அழகுள்ள சீதனம் கொடுக்கக் கூடிய மணமகள் தேவை. படத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 2092, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 2092

---

யாழ். இந்து வேளாள விஞ்ஞானப் பட்டதாரிக்கு 32 வயதிற்குட்பட்ட நற்குணம், அழகு பொருந்திய அதே தராதரமுடைய, தொழில் புரியும் மணப் பெண் தேவை. ஏனைய சகல விபரங்களுடனும் விண்ணப்பிக்கலாம்; படம், குறிப்பு கண்ணியமாக மீள அனுப்பி வைக்கப்படும். விளம்பர இலக்கம்: 2063, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 2063

## WANTED

Wanted Suppliers of Prawns/ Lobsters Should be cleaned, packed in ice and transported to Colombo. Daily requirement 1 Ton Please Contact S N Selvanayagam, 259/ 1, Galle Road, Colombo-4. 2079

---

For a Medical Practisioner Thuvaraka Pharmacy Y. M C A Shopping Complex A 107, Kandy Road, Chundukuli, Jaffna Negociate terms with management 2065

## சேவை

நீம் சுகாதார தூபம்: மழைக் காலத்தோடு நுளம்பும், இலையானும் அதிகமாகப் பெருகி உபத்திரவத்தைத் தருகின்றன. இவற்றைப் போக்குவதோடு வீடுகளுக்குப் புனிதத்தையும், சுகாதாரத்தையும், லக்ஷ்மி கடாட்சத்தையும் உண்டாக்கும். நீம் சுகாதார தூபம்- பக்கற்- 50 சதம் மட்டுமே; மில்க்வைற், யாழ்ப்பாணம். 2062

---

ஓர் நற்செய்தி 2000 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளைச் சேகரித்தனுப்பி 1பவுண் பெற்றுக் கொள்ளலாம் மில்க்வைற், யாழ்ப்பாணம். 2061

## தவறிவிட்டது

சரவணை மேற்கைச் சேர்ந்த இராசா ஸ்ரீசுந்தரராசா என்பவருடைய அடையாள அட்டை (இல: 582010390V) மயிலப்புலச் சந்திக்கும் மண்டைதீவிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் மேற் குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும் 2094

## 1986-ம் ஆண்டு யாழ் மாவட்ட அரச மரவேலைப் பாடசாலைகளின் ஒருவருட மரவேலைப் பயிற்சிக்கு பயிலுநர்களைச் சேர்த்தல்

சிறு கைத்தொழில் திணைக்களத்தினால் நடாத்தப்படும் யாழ்ப்பாணம், மானிப்பாய், கல்லூண்டாய் இவற்றில் மரவேலைப் பாடசாலைகளிற்கு மேற் சொல்லப்பட்ட பயிற்சிக்கான ஆண் பெண் இரு பாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன;

மேலும் விபரங்களிற்கு அண்மையில் உள்ள அரச மரவேலைப்பாடசாலை பொறுப்பதிகாரியையோ அல்லது சிறு கைத்தொழில் உதவிப் பணிப்பாளர், கச்சேரி, யாழ்ப்பாணத்திலோ நேரடியாகவோ கடித மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 31-12-1985.

சி. ஆர். வேலாயுதபிள்ளை,
உதவிப் பணிப்பாளர்,
சிறு கைத்தொழிற் பகுதி,
கச்சேரி, யாழ்ப்பாணம்.

2051

## வெற்று ஜாம் போத்தல்கள்

பாவித்த வெற்றுஜாம் போத்தல்கள் பெருமளவில் தேவைப்படுகின்றன. ஒவ்வொரு வெற்றுப்போத்தல்களும் ரூபா 2/50 சதப்படி கொள்வனவு செய்யப்படும் போத்தல்களை 'கற்பகம்' விற்பனை நிலையங்களிலோ அல்லது தெல்லிப்பளைப்பொருள் உற்பத்திச் சங்கக் காரியாலயத்திலோ ஒப்படைத்துப் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்,

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்
யாழ்ப்பாணம்.

தொலைபேசி:
23801, 22094 (2068)


## CLASSES

G. C. E. (O/L) Dec. 1986, Dec. 1987

### Mathematics Individual

TUITION-by Mrs. V. THIYAGARAJAH (B.Sc Lon)
Retired Vice Principal, Vembadi Girls High School,
Classes start on 10th December, 1985,
111, Vembadi Road, Jaffna.
(2078)

---

## மலிவு விற்பனை

தொழிற்சாலையில் பழுதடைந்த அலுமினியப் பாத்திரங்கள் வருடஇறுதி மலிவு விற்பனையில் 2-12-85 தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.

1 ருத். 25/- இலிருந்து 50/- வரை

### செல்லாசன்ஸ் சேல்ஸ் சென்ரர்

118, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(கடைத்தெரு பிள்ளையார் கோவில் முன்பாக)

---

உங்கள் அபிமானத்திற்குரிய

## மில்க்வைற் நீல சோப்




புதிய விலை ரூ. 2. 00 மட்டுமே

நுரைவளம்கூடிய மில்க்வைற் நீலசோப்பை வாங்கிப் பாவித்து மேலுறைகளை அனுப்பி மிகச் சிறந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்;

100 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பி கைவேஞ்சி ஒன்றைப் பரிசாகப்பெற்றுக்கொள்ளுங்கள்;

மில்க்வைற்- யாழ்ப்பாணம்

---

வெளிநாடு செல்வோர்க்கு

## ஓர் நற்செய்தி

★ மேற்கு ஜேர்மனி

★ பிரான்ஸ் ★ இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு எமது பிரதிநிதி உங்களை இங்கிருந்து அழைத்துச்செல்வார்.

மற்றும் சகல நாடுகளுக்குரிய பாஸ்போட், பொண்ட், விசா என்பவற்றுக்குத் தொடர்புகொள்ளவும்

### லிப்ருஸ் லிமிட்டெட்

R. G. கட்டிடம்,
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

60, SEA BEACH ROAD
PETTAH;
Telephone No; 29148


---

## மரண அறிவித்தல்

### திரு. சி. கே. சுப்பிரமணியம்

திரு: சி. கே. சுப்பிரமணியம் (கொழும்பு ரெக்கிரேடன்ஸ் - முன்னாள் ஊழியர்) 29-11-85 அன்று காலமானார். இவர், மல்லிகாவின் அன்புக்கணவரும், சிவகுமார், வசந்தகுமாரி, சசிகுமார் ஆகியோரின் தந்தையாரும் ஆவார் பூதவுடல் இன்று (1-12-85) காலை 4 மணிக்கு அன்னாரின் இல: 196, 2ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக கொழும்புத்துறை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

திருமதி மல்லிகா சுப்பிரமணியம்

2084

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



வார மலர்
ஈழநாடு
EELANADU VARAMALAR

அகில உலகப் புகழ் பெற்ற வான சாஸ்திரியும், சேர் ஐசக் நியூட்டனின் நன் மதிப்பைப் பெற்றவருமான தொமஸ் ஹேலி ஒரு வால் வெள்ளியின் தோற்றத்தை ஆழ்ந்து கற்று 1704ல் காணப்பட்ட அவ்வால் வெள்ளி மீண்டும் 1758ல் காட்சியளிக்குமெனத் தீர்க்கதரிசனமாகக் கூறினர். 1758ல் மீண்டும் தோன்றிய அவ்வால் வெள்ளியைக் காணும் பேறினை, ஹேலி பெறவில்லை. ஆனல்

காரைதீவு மக்கள் பெரும்பாலும் விவசாயம், மீன்பிடி ஆகியவற்றை தென் இந்தியாவுடன் வர்த்தகம் என்னும் முயற்சிகளிலேயே கருத்தாகவிருந்தனர்.

1876ல் பரவிய விஷபேதி சுப்பிரமணியரையும் பார்வதியையும் பலி கொண்டது. அம்பலவாணர் அநாதையானர். இவர்களின் சிறிய தகப்பராகிய கந்தப்பர் சரவணமுத்து இந்த மூன்று பிள்ளைகளையும் வளர்ப்பதற்கு முன் வந்தார். இக்காலத்தில் முறையான பள்ளி


உணரப்பட்டது. அரம்போலும் கூரிய இவ்விவேக சீலர் கல்லூரிப் பயிற்சிநெறியை முதலாம் பிரிவில் கற்றுத் தேர்ந்தார். யாழ்ப்பாணக் கல்லூரியில் பயிற்சிபெறும் காலத்திலேயே இம்மேதை ஓர் உதவி ஆசிரியராக (Instructor) நியமிக்கப்பட்டார் இது அக்கால கட்டத்திலே பெரும் கௌரவமாகக் கருதப்பட்டது. யாழ்ப்பாணக் கல்லூரியின் முதல்தர சான்றிதழுடன் வெளியேறிய அலென் ஆபிரகாம் தெல்லிப்பழை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். அவர் தெல்லிப்பழைக்கு விரிவுரையாளராகச் சென்றபொழுது அக்கல்லூரி மாணவர்கள் விசேஷ வரவேற்புக்கீதங்களை இயற்றிப்பாடினர் என்று தெரிகின்றது. அலென் ஆபிரகாமின் வருகையைக் குறித்து அவர்கள் உண்மையாகவே ஆனந்

# 'ஹேலி வால்வெள்ளி'யின் 1910ம் ஆண்டு வெளிப்பாட்டை காரைதீவிலிருந்து கணித்த

## 'வானசாஸ்திரி' அம்பலவாணர்

அவர் காலத்து வானசாஸ்திரிகளுக்கு அம் மாமேதையின் கணிப்பு சரியானதென 1758ல் தோன்றிய வால் வெள்ளி உணர்த்திற்று. இதனுல் அவ்வால் வெள்ளிக்கு அவருடைய நாமஞ் சூட்டப் பெற்றது.

1834இலும் 1910லும் தோன்றிய இவ்வால் வெள்ளி விஞ்ஞானிகளால் அவதானிக்கப்பட்டது. 1910ல் தோன்றிய வால்வெள்ளியை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆசிரியராகவிருந்த அலென் ஆபிரகாம் அம்பலவாணர் சரியாகக் கணித்து உலகிலேயே பெரும் பரபரப்பை ஏற்படுத்தினர். இதற்காக இவ்வாசிரியப் பெருந்தகைக்கு இங்கிலாந்து வேந்தவை Fellow of the Royal Astronomical Society என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. இந்த விருதைக் குறிக்கும் சான்றிதழ் இன்றும் யாழ்ப்பாணக் கல்லூரி நூல் நிலையத்திற் காணப்படுகின்



கல் காரைதீவில் இருக்கவில்லை. எனவே அம்பலவாணர் திருமதி-சேதி நாகமுத்து என்பவரின் திண்ணைப் பள்ளியில் பயின்று வந்தார். இவ்வம்மையாரிடம் தமிழ் நெடுங்கணக்கையும் எளிய இலக்கியங்கள் சிலவற்றையும் கற்றறிந்த அம்பலவாணர் தமது கல்வி

தப்பட்டனர். ஆனல் அவர்களின் ஆனந்தம் அதிககாலம் நீடிக்கவில்லை. ஏனெனில் 1891ல் அலென் ஆபிரகாம் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றும்படி யாழ்ப்பாணக் கல்லூரியினரால் அழைக்கப்பட்டார். யாழ்ப்பாணக்கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் Senior Local என்ற பரீட்சையை 1886இலும் சென்னை மட்றிக்குலேஷன் பரீட்சையை 1889இலும் வெற்றிகரமாகத் தாண்டினர். 1893ல் கல்கத்தாப் பல்கலைக்கழகத்தின் F. A. பரீட்சையிற் தேறி பின்னர் B A பரீட்சையிலும் சித்திபெற்றர். B. A பரீட்சைக்குத் தாமகவே பயின்று யாழ்ப்பாணத்திலிருந்தே தோன்றியது பெருமைக்குரியவிடயமாகும்.

இக்கால கட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி கல்கத்தாப் பல்கலைக் கழகத்துடன் இணைப்புப் பெற்று அதன் FA பரீட்சைக்கும் B A பரீட்சைக்கும் மாணவர்களைத் தயார் செய்துகொண்டிருந்தது. அப்பொழுது யாழ்ப்பாணக் கல்லூரியில் கணிதம் வான சாஸ்திரம் என்பவற்றினைப் போதித்த ஒரேயாசிரியர் அலென் ஆபிரகாமேயாகும்.

இவர் சுப்பிரமணியம் சங்கரப்பிள்ளையின் [மைத்துனி] மகள் முத்தாச்சியை விவாகம் செய்தார் இத்தம்பதிகளுக்கு, கனகசுந்தரம் அருளையா என்னும் இரண்டு புதல்வர்களும் ஆச்சிமுத்து எனும் புதல்வியும் பிறந்தனர் நாற்பான்டுகளில் அலென் தமது

## 20ம் நூற்றண்டின் ஆரம்பத்தில் F. R. A. S· பட்டம் பெற்ற ஒரேயொரு இலங்கை அறிஞர்!

றது. 1921ல் இவ் விருதைப் பெற்ற உலக விஞ்ஞானிகளின் பட்டியலும் இந்நூல் நிலையத்திற் பேணிப் பாதுகாக்கப்பட்டுள்ளது இதிலிருந்து அக்கால இலங்கையிலு அக்கால கட்டத்தில் இவ் விருதைப் பெற்ற ஒரேயொரு அறிஞர் அலென் ஆபிரகாம் அம்பலவாணர் என்பதனை உணரக்கூடியதாகவுள்ளது.

சுப்பிரமணியம் அம்பலவாணர் (அலென் ஆபிரகாம் அம்பலவாணர்) 1865ல் காரைதீவு என முன்னர் அழைக்கப்பட்ட காரைநகரில் சக்கலாவோடை என்னும் குறிச்சிக்கு அருகாமையிலுள்ள பயிரிக் கூடலில், கந்தப்பர் சுப்பிரமணியத்துக்கும் மனைவி பார்வதிக்கும் சிரேஷ்ட புதல்வனுகப் பிறந்தார் அவருக்கு இரண்டு சகோதரர்களும் ஒரு சகோதரியும் பிறந்தனர். அக் காலத்துக்

யைக் கார்த்திகேசு ஐயரின் கீழ் தொடர்ந்தார். அவரிடம் உயர் இலக்கியங்களையும் இலக்கணங்களையும் ஐயந்திரிபறக்கற்றர்.

1881ல் டிசம்பர் மாதம் தெல்லிப்பழையில் இயங்கிய, நன்கொடை பெறும் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் அனுமதி பெற்றர். அங்கு பயிலும் காலை கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர். 1883ல் ஆசிரியர் பயிற்சியை முடித்து வெளியேறினர். இதன்பின்னர் காரைநகரைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவருமாகிய திரு. திசைநாயகம் என்னும் பழக்க நிரு அவரை யாழ்ப்பாணக் கல்லூரியிற் சேர்த்து கல்லூரி வழங்கிய ஐந்துவருட பயிற்சியை முடிக்குமாறு செய்தார்.

இக்கால கட்டத்திலேதான் (1884-1888 அலென் ஆபிரகாமின் மதிநுட்பமும் ஆராய்ச்சித்திறனும் அறிஞர்களினல்

து. விஸ்வநாதன்
விஞ்ஞானத்துறைத் தலைவர், யாழ்ப்பாணக் கல்லூரி

மனைவியை இழந்தார் பொன்னையா வதயல்முத்து என்பவரைத் தமது இரண்டாந்தாரமாக மணந்துகொண்டார்.

யாழ்ப்பாணக் கல்லூரி 1823ல் ஆரம்பித்த நாட் தொடக்கம் வான சாஸ்திரத்தைக் கற்பித்து வந்ததென்பது மறுக்கமுடியாத உண்மையாகும். ஆனல் அலென் ஆபிரகாம் அவர்களே வான சாஸ்திர வளர்ச்சியைத் தமது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு விளங்கினர்.

செய்தார். வானமண்டலத்தையும் விண்மீன்களையும் ஆய்வு செய்வதில் தன்பொழுதைச் செலவிட்டார். இக்காலத்தில் எஸ். மகேஸ்வர சர்மா என்னும் ஓர் அந்தண மாணவர் அவரிடம் பயின்றர். அவரின் துணைகொண்டு பஞ்சாங்கங்களையும் கோள் கணிப்புக்களையும் அறிந்து கொண்டு தமது வான சாஸ்திர கணிப்புக்களை வெளியிட்டார்,

யாழ்ப்பாணக் கல்லூரியின் சஞ்சிகையான 'மிஸலனி'. 'உதயதாரகை' ஆங்கிலத்தின் Royal Astronomical Society' என்னும் ஏடுகள். வானசாஸ்திரத்தைக் குறித்து அவர் எழுதிய உயர்ந்த கட்டுரைகளைத் தாங்கி வந்தன. அவர் எழுதிய கட்டுரைகள் சில பின் வருமாறு;

ஆரம்பப் பள்ளிக் கூடங்களில் பயிற்சி நெறியில் வானசாஸ்திரம், ஹேலி வால்வெள்ளி, உஷ்ணவலய வானமண்டலம் வான மண்டலத்தில் அதிசயங்கள்.

காரைதீவிலிருந்தே இம் மேதையின் மிக்க ஆராய்ச்சி


1910ல் தோன்றிய ஹேலி வால்வெள்ளியின் சரியான நேரத்தைக் கணித்துக் கூறிய தனல் அலென் ஆபிரகாம் உலகப் புகழ்பெற்றார். அவ் வால்வெள்ளி 1910ம் ஆண்டு மே மாதம் 19ந் திகதி காலை 9-00 மணிக்கும் 10-00 மணிக்குமிடையில் பூமிக்கு மிக அருகாமையில் நிற்குமென எடுத்துக் கூறினர். அவர் கணித்த வண்ணமே வால்வெள்ளி தோன்றியது. அவரது கட்டுரையும் கணிப்புக்களும் இங்கிலாந்திலிருந்த Royal Astronomical Society க்கும் கிடைத்தவுடன் அவர்கள் அவருக்கு Fellow of the Royal Astronomical Society என்ற விருதை வழங்கினர்கள். சாதாரண ஆசிரியன் ஒருவன் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத கௌரவம் இது.

வானசாத்திரத்துடன் இசை தமிழ் இலக்கியம், விவசாயம் சமூக சேவை என்பவற்றிலும் இம்மேதை ஆர்வமுடையவராக இருந்தார். அவர் இயற்றிய கிறிஸ்தவ கீதங்கள் எட்டு இப்பொழுதும் தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் ஜெபப் புத்தகத்திற் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆனல் சைவத் திருமுறைகளையும் பக்தியுடனும் பண்புடனும் பாடும் ஆற்றல் பெற்றிருந்தார்.

ஒருமுறை சேர் பொன். இராமநாதன் காரைதீவுக்கு அழை

(10ம் பக்கம் பார்க்க)

## சாந்திக்கு ராஜ்காட் செல்லுங்கள்



உலகுக்கு ஜனநாயக வாழ்வை அறிமுகப்படுத்திய மாமேதை அமெரிக்க மக்கள் தினசரி தரிசனம் செய்யுமிடம் லிங்கன் மெமோறியல்; அதேபோல் சோஷலிச சமுதாயத்துக்கு வழிகாட்டிய மாமேதை லெனினை சோவியத் மக்கள் லெனின் சமாதியில் கண்டுகண்ணீர் விடுகின்றனர்.

இன்று ஜெனிவாவில் உருவாகும் உலகசமாதான உணர்வு ஒரு புது நம்பிக்கைக்கு இடமளிக்கிறது.

இது வேரூன்றி உரப்பட உகந்த இடம் இன்னென்றிருக்கிறது.

அதனைக் கண்டு பிடித்திருக்கிறார் நிக்கரகுவா வெளிவிவகார அமைச்சர் அருட்திரு. மிகல் பிறக்மன்.

ஐந்து நாள் விஜயத்தில் பாரதம் வந்திருந்த அமைச்சர் கடந்த மாதம் 22ந்தேதி வெள்ளி முழுவதையும் மகாத்மாவின் சமாதியான ராஜ்காட்டில் உபவாசமிருந்து கழித்தார். அவருக்கு அருகில் சில மணித்தியாலங்கள் இந்த உபவாசத்தில் சேர்ந்தவர் அந்நாட்டின் தூதுவர் செல்வி ஹலிமா சேக்கர்.

மத்திய அமெரிக்க நாடுகளில் மலிந்திருக்கும் போரும் பூசலும் வெளிநாட்டுத் தலையீட்டால் வளர்ந்து வருவதை எதிர்த்துப் போராடும் நிக்கராகுவாவிற்கு காந்திய சத்தியாக்கிரகமே தகுந்த வழியென்ற முடிவுக்கு வந்திருக்கும் அமைச்சர் மகாத்மாவின் கீதங்களை ஸ்பானிஷ் மொழியில் மொழிபெயர்த்து வருகிருர்.

ஆத்மபலத்தினுல் மட்டுமே இன்றைய உலகுக்கு அமைதிகிட்டுமென்பதை ஜெனிவாவில் சந்தித்த ரீகனும் கோர்பச்சேவும் தம்மை அறியாமலே ஒப்புக்கொண்டுள்ளனர்,

ஜெனிவாவிலிருந்து இவ்விருவரும் ராஜ்காட்டுக்கு யாத்திரை செய்வது நற்பயனளிக்கும் என்பது நிக்கரகுவா வெளிவிவகார அமைச்சரின் உள்ளக்கிடக்கை.

ஆத்மபலத்தினல் தீமையை எதிர்க்கவேண்டுமென்ற வேதாந்தம் ''எந்தஜீவராசிகளுக்கும் தீங்கிழைக்காத தன்மை'' என்ற கருத்தைக்கொண்டது.

ராஜ்காட் காட்டும் வழி சாந்திக்கு இட்டுச்செல்லுமென்பதை நாம் உணரும் நாள் கிட்டிவிட்டது.

# இவ்வாரம் எப்படி?

## இன்று

குரோதன—கார்த்திகை
திகதி—16 (1985-12-1)
ஞாயிற்றுக்கிழமை
திதி— சதுர்த்தி
பிற்பகல் வரை
நக்ஷத்திரம்- புனர்பூசம்
முன் இரவு வரை

### மேடம்

துணிச்சலுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள். சிலருக்குப் பொது சனத் தலைமையும் கிடைக்கலாம். விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு. மாணவர்களுக்குக் கல்வியில் ஆர்வம் பிறக்கும். இவ்வாரம் எவ்விடயத்திலும் அவதானம் வேண்டும்.

### இடபம்

வாழ்க்கையில் புதிய அபிவிருத்தி தென்படும். சுற்றுடலில் உற்சாகமான வரவேற்புக் கிடைக்கும். வீட்டில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும். விருந்துபசாரங்களும் உண்டு. சிலருக்கு வாகனம் மூலம் இலாபம் கிட்டும்.

### மிதுனம்

அவசரம் வேண்டாம். ஆயுதபீடைக்கும் இடமுண்டு. வியாபாரத் துறையில் மந்தநிலை காணப்படும். உடல் நலத்தைப் பேணிக் கொள்ளவும். இவ் வாரம் எதிலும் தடுமாற்றம் ஏற்படலாம். பொறுமை நன்று.

### கடகம்

அதிகாரப் பேறுக்கும் அதிக பொருள் வரவிற்கும் இடம் உண்டு. ஆக்கப் பணியில் அதிகம் ஈடுபடுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர். நீண்ட நாள் பூமிப் பிணக்கு நிவர்த்தியாகும்.

### சிங்கம்

குடும்பத்தில் சிறுபூசல் தலைதூக்கும். பெரியவர் ஒருவருடன் அபிப்பிராய பேதம் தோன்றக் கூடும். சகோதர வழியாலும் சஞ்சலம் தோன்றும். தொழிலில் தடைகள் உண்டு. அவசர முடிவின் மூலம் சில துன்பங்கள் விளையும்.

### கன்னி

வாழ்க்கையில் சிலமுன்னேற்றமான சம்பவங்கள் இடம் பெறும். வாகன விருத்திக்கும் இடமுண்டு. நீர்ப்பாசனப் பகுதியில் கடமையாற்றுபவர்களுக்கு சிறப்பான வாரம். கல்வியிலும் ஆர்வம் பிறக்கும்.

### துலாம்

செய் தொழிலால் சிறப்புக் கிடைக்கும். வழக்கு விவகாரங்களில் வெற்றி உண்டு. வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். புரட்சிகரமான மாறுதல்களை விரும்புவீர்கள்.

### விருச்சிகம்

நம்பிக்கை மோசடி நடக்கக் கூடும். நண்பர் ஒருவர் உமது காலை வாரி விடுவதற்கு முயற்சி எடுக்கலாம். செலவினங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும். இடைக்காலப் பிரிவுக்கும் இடமுண்டு. தெய்வ நம்பிக்கை சிறந்த மருந்து.

### தனுசு

வெற்றி உமதருகில் விரைந்து வரும். எதிர் பார்த்தவர்கள் ஆதரவு தருவதற்கு முன் வருவார்கள். களஸ்திர வழியாலும் நன்மை சேரும். குடும்பத்தில் நீண்ட நாள் கனவு நிவர்த்தியாகலாம்.

### மகரம்

விஷப் பரீட்சையால் விபரீதங்கள் விளையலாம். மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடலாம். தொழில் துறையிலும் நஷ்டத்திற்கு இடமுண்டு. நண்பனின் அதிதம் வேதனையைத் தரும். மனத்திடம் வேண்டும்.

### கும்பம்

கலைஞர்கள் போற்றப்படுவார்கள் வெளியூர்களிலிருந்து அழைப்புக்கிடைக்கலாம். பிறர் வழி தனவரவிற்கும் இடமுண்டு. குடும்ப வாழ்க்கை சமமாக இருக்கும். தூரத்து உறவினர் ஒருவர் உங்களுடன் ஒத்துழைப்பதற்கு முன் வருவார்.

### மீனம்

புதிய தொழில் குறித்துச் சிந்தனை உருவாகும். கூட்டு வியாபாரத்தால் முன்னேற்றம் உண்டு கற்றதனால் பயன் கிட்டாகம் கிட்டும். அறிஞர்கள்போற்றுவர். ஆதரவும் கிடைக்கும். தூரத்துச் செய்தி பொன்று உற்சாகத்தைத் தரும்.

திருமலை
க.வே.ரவீந்திரன்

## மழைக்காலம்

மேக மிருண்டு கறுக்கு தம்மா
முழக்கம் முழங்கி மிரட்டு தம்மா
ஆகு மின்னற் கீற்றடி வானில்
அக்கிருள் கிழித்து மறையு தம்மா

பாடும் புளு படு பதற்ற மென்னே!
பாவம் அங்கினியும் பறக்கு தம்மா
ஆடு மாடுடன் அழகார் குதிரை
அழைக்கு மொலி செவி கேட்குதம்மா

காற்று புயலாகச் சீறுதம்மா
கடலும் பொங்கிக் கொந்தளிக் குதம்மா
ஆற்ற லைதியும் குலையுதம்மா
ஆண்டவன் காக்க வேண்டுமம்மா

சோவென பேபெரி ரைச் சலுடன்
துளிச் சரமாய் மழைபொழி யுதம்மா
கோவென அழுதை கூச்சமின்றிக்
கொட்டு மழைதனி லனையு தம்மா

மரஞ்செடி கொடி மற்றுந் தாவரம்
மகிழ்ந்து மழையிற் குளிக்கு தம்மா
சரஞ்செறி பூவொடு காய்கனி தவிர்
கனிமிகுந்து பல பலக்கு தம்மா

வெளியெங்கும் வெள்ளம் பாயு தம்மா
வீதியும் மூழ்கிக் கிடக்கு தம்மா
எளிதிற் கடதாகி மோட்டுஞ் செய்து
ஏவல் கொள்ளை ஆசையம்மா

—மணிமன்றன்

## பிள்ளையார் கதை



பிள்ளையார் கதையிலும் சரி கந்தபுராணத்திலும் சரி விநாயகப்பெருமான் கஜமுகனைச் சங்கரித்தபின்னர் வல்லமைக்கும் விநாயகருக்கும் திருமணம் நிகழ்ந்ததென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இதேபோலவே சூரனை முருகப் பெருமான் சங்காரம் செய்தபின் தெய்வானையம்மையார் திருமணம் நிகழ்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

ஒருமனிதன் சில சாதனைகள் செய்து தன்னை ஆண்மையுள்ளவன் என்று நிறுவியபின்னரே அவன் திருமணம்செய்து கொள்ளும் தகுதியைப் பெறுவான் என்பது நம் நாட்டின் பண்டைய கொள்கையாகும். தான் கொன்ற புலியின்பல்லையே வீரன் தாலியாக மனைவிக்குக் கட்டுவான் என்றகருத்தும் இலக்கியங்களில் காணப்படுகின்றது. இந்தக்கொள்கையை உறுதியாகவுடைய சமூகத்தில் சொல்லப்பட்ட - சமூகத்துக்கு உயர்ந்த இலட்சியங்களைப் போதித்த புராணங்களிலும் கதைசொல்லும் போக்கிலேயே கடவுளருக்கும் சிறந்த செயல்களைச் செய்தபின்னர் திருமணம் நடந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது எனக் கருதலாம்.

கஜமுகசங்காரத்தின் பின் வல்லமை அம்பிகையைத் திருமணம் செய்தபின்னர் கயிலையை நோக்கிச்சென்றார் விநாயகர். செல்லும்வழியில் செங்காட்டங்குடி என்னுமிடத்தில் சிவலிங்கமூர்த்தியை அமைத்து சிவபூசை செய்தார்.

— அருளாளன்


## தேவை

இறால், சிங்க இறால்,
மீன் ஆகாரம்
உயிர் நண்டுகள்,
கடல் அட்டை

இப்பொருட்கள் பெருந்தொகையில் தேவைப்படுகின்றன. வழங்க விரும்புவோர் கிலோ ஒன்றிற்கான விலையைக் குறித்து தொடர்பு கொள்ளவும்.

கால் நடை எலும்புகள்

கொம்புகள், குழம்புப் பாதங்கள் அற்ற நன்கு உலர்ந்த கால்நடை எலும்புகள் தேவை; கிலோ ஒன்றிற்கான விலையைக் குறித்து எம்முடன் தொடர்பு கொள்ளவும். அத்துடன் கையிருப்பில் உள்ள தொகையையும் குறிப்பிடவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

கே. ஜி டிலிவேர்ஸ்
த. பெ எண் 1857
கொழும்பு.

2091



## 10வது ஆண்டு நினைவஞ்சலி

எட்வேட் நவரத்தினசிங்கம்



01-12-1975

ஆண்டுகள் பத்து ஆனாலும் அன்பை என்றும் மறந்திடோம். மீண்டும் மீண்டும் வேண்டுவோம்: மேலாம் இறைவன் இராச்சியத்தில் நீண்ட வாழ்வு நீர்பெறும் நினைவோடு வாழ்வோம்.

மனைவி, மக்கள், மருமகள், பேரர்;

பண்டத்தரிப்பு.

2066



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கந்தையா ஐங்கரன்

(யாழ்ப்பாணக் கல்லூரி உயர்தர மாணவன்)



ஆண்டவன்
படைப்பு:
30-10-1964

அவுணர்கள்
அழிப்பு:
12-12-1984

ஐங்கரச் செல்வமே அன்பான தெய்வமே
அம்பிகைதன் அணைப்பிலே அமரத்துவ வாழ்விலே
அமைதிகாணும் ஐங்கரத் தெய்வமகனே
பொறுப்புணர்ந்த தோன்றலாய் மறப்பகற்றி வாழ்ந்தனை
உன்அன்பான செயலும் வதனம் எம் நெஞ்சை விட்டகலாது
உன் ஆத்ம சாந்தி ஒன்றுதான் எம் அன்றாடப்
பிரார்த்தனை

திதி: மார்கழி அபரபக்க சதுர்த்தி: 01-12-1985ஞாயிறு

உம்பிரிவால் வாடும்
ஐயா, அம்மா, அண்ணா, தம்பிமார், தங்கை,
உற்றார், உறவினர்;

பணிப்புலம், பண்டத்தரிப்பு

1975



# RADIO AND ELECTRONICS ENGINEERING COURSE

## Weekend Classes - 6 Months

Radio, Tape Recorder, Hi Fi Stereo Ampilifier, Radio Control, Transformer Winding

பழுது பார்க்கவும் பிறர் உதவியின்றி உருவாக்கவும் இவற்றோடு இன்னோரன்ன பல இலத்திரனியற் கருவிகள் யாவற்றின் அடிப்படைஅமைப்புக்குரிய தெளிவான

THEORY AND PRACTICALS ம்
DIGITAL ELECTRONICS AND THEORY OF TELEVISION

★ வெளிநாடு செல்பவர்களுக்கு ஓர் அரியவாய்ப்பு
★ சுயதொழிலை விரும்புவர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்.
✶ எமது பழைய மாணவர்கள் பலர் அரசகூட்டுத் தாபனங்களில் வேலைவாய்ப்பை பெற்றிருக்கிறார்கள்

கட்டணம் ரூ 1000/-

(தவணை முறையிலும் கட்டணத்தைச் செலுத்தலாம்.)

பிரபல விரிவுரையாளர்;

ஆசிரியர்: E. கணபதிப்பிள்ளை

ஆரம்பம்: 7-12-85 காலை 10 மணி

# CANTABIA Institute

21, Main Street, Jaffna
T' Phone: 24201

## பகுதி இரண்டு: அழித்தல்

கொன்றைமர நிழலில் சாந்தமே வடிவாக யோகியார் அமர்ந்திருந்தார். மாலைக் கதிர்களின் தழுவலில் அவர் அமர்ந்திருந்த சூழல் வெளி அருள் வெள்ளமாகப் பிரகாசிப்பதாகச் சிவசங்கிலிக்குப்பட்டது. அமைச்சர் புவனேகவாகுவால் கட்டப்பட்ட முதலாவது கந்தசுவாமி கோயில் இருந்தவிடத்திற்கு அருகில் தான் யோகியார் நிஷ்டையில் அமர்ந்திருக்கும் கொன்றைமரம், வானோங்கி வளர்ந்திருந்தது.

அவர்முன் வெளி நிலத்தில் பயபக்தியுடன் அமர்ந்திருந்தார்கள். பலர் அவர்முன் கைகட்டி வாய் புதைத்து நின்றிருந்தார்கள். சிவசங்கிலி சற்றுத் தூரத்தில் நின்றவாறே அவரைக் கவனித்தான்.

அவருக்கு எத்தனை வயதிருக்கும் என்பதை அவனால் அனுமானிக்க முடியவில்லை. அவர் தலையில் முன்பக்கத்தில் வழுக்கல் விழுந்திருந்தது. அடர்த்தியாக வெண்பஞ்சினைப் பழிக்குமாப்போல தாடி வளர்ந்திருந்தது. அரையில் பழுப்பேறிய காசாய துண்டும் அணிந்திருந்தார்.

அவர்முன் அமர்ந்தும் விலகியும் காணப்பட்ட மக்கள் கூட்டத்தில் இருமதமக்களை அவன் கண்டான். மனத்தில் வியப்புத் தோன்றியது. சைவப்பெரியார் சுப்பிரமணியபிள்ளையும் அங்கிருந்தார். குருக்கள் வளவில் அண்மைக்காலத்தில் குடியேறிய முகம்மது சாய்புவும் அங்கு நின்றிருந்தார்.


யார் இந்தயோகியார் என்ற எண்ணம் அவன்மனதில் முண்டிட்டது. அவன் பல சந்நியாசிகளைக் கண்டிருக்கிறான். பருத்தித்துறையில் மரக்கலங்களிலிருந்து இறங்கி, சிவனொளி பாதமலைக்கும் கதிர்காமத்திற்கும் தெற்குநோக்கிக் கால்நடையாக யாத்திரைபோகும் யோகிகள் கூட்டத்தை அவன் கண்டிருக்கிறான். இந்தியாவிலிருந்து அவர்கள் வடக்கே யாழ்ப்பாணக்கரையில் இறங்கி தென்புலம் செல்வார்கள்.

அவர்களில் பலர் [illegible] தாங்கியவர்களெனவும் ஒரு கதை யாழ்ப்பாணத்தில் நிலவுகின்றது. கண்டி அரசனின் படையில் சேர்வதற்காக இவ்வேடத்தில் அவர்கள் செல்வதாகப் பேசிக்கொண்டார்கள்.

அவன் அதை நம்பத் தயாராகவில்லை. யோகியார் எதையோ கூறுவதையும் அவர்முன் இருந்தவர்கள் அவதானமாக அவற்றை அவதானிப்பதையும் அவன் கண்டான். யோகியாரை நெருங்கிச்செல்ல அவனுக்குத் தடங்கலாக இருந்தது.

பல நாழிகைப்பொழுதின் கழிவில், சுப்பிரமணியபிள்ளை அவ்விடத்திலிருந்து எழுந்து வந்தார். வேட்டியும் உத்தரியமும் தரித்திருந்த அச்சைவர் சிவசங்கிலியைக் கண்டதும் சற்றுத் தரித்துநின்றார்.

# கந்தவேள் கோட்டம்



'செங்கை ஆழியான்'

"என்னப்பா இங்கு நிற்கிறாய்!" என்று அவனைக் கேட்டார்.

"யோகியைப் பார்க்க வந்தேன்......" என்றான் அவன்.

"பார்க்கவா வந்தாய்? தரிசிக்க வரவில்லையா?" அதற்குப் பதில் அவனுக்குத் தெரியவில்லை. திகைத்துப்போய் நின்றிருந்தான். பின்னர் அவசரமாகக் கேட்டான்: "அவர் யார் ஐயா?"

"யாருக்குத் தெரியும்? நதிமூலத்தையும் ரிஷி மூலத்தையும் எவராலும் அறிய முடியாதப்பா."

"அவரைச் சிக்கந்தர் என்கிறார்களே?"

"அவராகத் தன் பெயரை ஒருபோதும் கூறியிருக்க மாட்டார். ஆனால் அவரை நான் எங்கோ பார்த்ததுபோன்ற ஓர் உணர்வு இருக்கிறது. நான் நினைப்பது மட்டும் சரியாகவிருந்தால் ..." — அவர் தயங்கி நின்றிருந்தார்! "அப்படியிருக்காது"

"சொல்லுங்கள், ஐயா..." என்ற சிவசங்கிலி ஆர்வத்துடன் கேட்டான்.

"அவர் பெரிய மகான் அப்பா. வேத ஆகமங்களின் உட்பொருள்களை நன்கறிந்திருக்கிறார், மனித வாழ்வின் செந்நெறிகளைத் தெளிவாகத் தெரிந்திருக்கிறார். நடந்தது நடக்கப்போவது யாவற்றையும் தெரிந்த திரிஞானி..."

"அவரை உங்களுக்குத் தெரியும் என்றீர்களே."

"அப்படித்தான் முதலில் ஒரு எண்ணம் தலைதூக்கியது. பின்னர் அப்படியில்லையெனத் தெளிவு பெற்றுள்ளேன்."

"நடக்கப்போவது தெரிந்த ஞானி என்கிறீர்களே? யாழ்ப்பாண இராச்சியத்திற்கு என்ன நடக்கப்போகுதாம்" என்று சிவசங்கிலி மீண்டும் கேட்டான்.

"நீ விடமாட்டாய் என்னைப்போக, என்ன நடக்கப்போகுதா? பெரியயுத்தம் நடக்கப்போகுதாம். பறங்கிகள் படையெடுத்து வரப்போகிறார்களாம்."

சிவசங்கிலி சிரித்தான்.

"..எல்லாருக்கும் தெரிந்த விஷயம்தான், ஐயா. யுத்தம் வரப்போவது ஊரெல்லாம் தெரியும். பறங்கிகள் படையெடுக்கப்போவது யாருக்குத் தெரியாது?"

சுப்பிரமணியபிள்ளை அவனைக் கோபத்துடன் பார்த்தார்.

"யுத்தத்தின்முடிவு உனக்குத் தெரியுமா? அவருக்குத் தெரிந்திருக்கிறது... யாழ்ப்பாண அரசின் பெருந் தலைகள் இதில் அழியப் போகின்றன. இப்போது நாம் நின்று பேசிக்கொண்டிருக்கிறோமே ... வீரமாகாளியம்மன் கோயிலுக்கும் பெரிய ஆலயத்திற்கும் இடைப்பட்ட இந்த வெளியில் பெரும்போர் நிகழுமாம். நான் அதில் சமாதியாவாராம் என யோகியார் கூறினார், சங்கிலி..."

"யுத்தத்தில் நாம் தோற்றுப் போவோமா?..."

"பெரும் அழிவின் பின்னர் சமாதானம் ஏற்படுமாம்..."

சுப்பிரமணியபிள்ளை அவ்விடத்தினை விட்டு நகர்ந்ததன் பின்னரும் சிவசங்கிலி அவ்விடத்தில் நின்றிருந்தான். அவ்விடத்தில் நின்று பார்க்கும் போது யோகியாரின் வடிவம் நன்கு தெரிந்தது. தன்னையறியாமல் கரங்கூப்பி வணங்கினான்.

"என்ன சங்கிலி, தூர நின்றே கும்பிடுகின்றாய்?" என்றபடி அவனருகில் முகம்மது சாய்பு வந்தார்.

"நீங்களும் இங்கு?..."

"நீ என்ன சொல்கிறாய் என்பது புரிகிறது, தம்பி. அவர் பெரிய பாவா... அவருக்குத் தெரியாதது எதுவுமில்லை, அவர் நன்மார்க்கத்தைத் தான் போதிக்கிறார்"

"பாவா வா..."

"ஆமாம் ... அல்லாகு அக்பர்! அல்லாவே பெரியவன் என்பதை அவர் தெரிந்திருக்கிறார். அக்குர்ஆனின் தத்துவ போதனைகளை அவர் எவ்வளவு தெளிவாகத் தெரிந்திருக்கிறார் தெரியுமா?..."

சிவசங்கிலி சிந்தனையில் ஆழ்ந்தான். அவனைக் குழப்பம் ஆட்கொண்டது.

பெரிய ஆலயத்திற்குச் சென்று கைலாயநாதக்குருக்களுடன் பேசும் வரை அவனது குழப்பம் தீரவில்லை.

"நதிகள் பலவாகவிருந்தாலும், பலவழிகளில் சென்றாலும் இறுதியில் கடலைத்தான் அடைகின்றன சங்கிலி. அப்படித்தான் சமய மார்க்கங்களும் என்கிறது. பகவத்கீதை..."

"வரப்போகின்ற யுத்தத்தில் பெரும் அழிவு ஏற்படப் போகுதாம்..."

"யுத்தம் என்றால் அழிவுதான், சங்கிலி. நான் என் வாழ்வில் ஒரு பெரும்போரைச் சந்தித்திருக்கிறேன். முப்பத்தொரு வருடங்களுக்கு முன் 1560 ஆம் ஆண்டு மாரிகாலம் தொடங்குவதற்குச் சற்றுமுன்னர் பிறகன்சா என்ற பறங்கித் தளபதி பெரும் படையுடன் யாழ்ப்பாணத்திற்கு வந்தான். அப்போது எனக்குப் பதினெட்டு வயது. நீ பிறந்திருக்கவும்மாட்டாய். எழுபத்தேழு போர்க்கப்பல்களுடன் கரையூரில் அவன் இறங்கினான். நமது மன்னன் சங்கிலி செகராசசேகரனோ பிறகன்சாவின் படை கொழும்புத்துறையில் இறங்குமெனத் தப்புக் கணக்குப் போட்டு அங்கு பெரும்படையுடன் காத்திருந்தான். பண்ணைத் துறையில் காத்திருந்த பட்டத்திளவரசன் தான் பறங்கிகளின் படையை எதிர்த்தான். இரண்டாயிரம் வீரர்களுடன் எதிர்த்தும் பறங்கிகள் பொழிந்த குண்டுமாரிக்கு எதிர்நிற்கமுடியவில்லை. எனக்கு இன்றும் நினைவிருக்கின்றது. வெடித்த பீரங்கிகளின் சத்தம் காதுகளில் கேட்கின்றது. தமிழர் படை பின்வாங்கியது..."

## குருக்களின் ஆவேசம்

"தோற்றுவிட்டார்களா?"

"அப்படித்தான்... பிறகன்சாவின் படை அணிவகுத்து நல்லூரை நோக்கி வந்தது. சந்தியாகு.. என்று முழக்கமிட்டவாறு பறங்கிப்படை தமிழர் படையைத் தாக்கியது நகரின் மதிலை உடைத்துக்கொண்டு பறங்கிப்படை உட்புகுந்தது. நகரினுள் நடந்த யுத்தத்தை நான் கண்ணால் பார்த்தேன். தெருவில் பனையோலைகளால் மூடப்பட்டிருந்த பீரங்கிகள் வெடித்துச் சில பறங்கிகள் இறந்தனர். தமிழர் படை, வீடுகளின்மேல் ஏறிநின்று சரமாரியாகக் குண்டுகளைப் பொழிந்தது. பிறகன்சா ஏறிவந்த குதிரையைக் கூட ஒரு வீரன் வெட்டி வீழ்த்தினான். அப்படியிருந்தும் தோல்வியே கிட்டியது. மன்னன் சங்கிலி செகராசசேக-

## அத்தியாயம் - 2

ரன் பிறகன்சாவுடன் இறுதியில் சமாதான ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொள்ள நேர்ந்தது"

"நீங்கள் அந்த யுத்தத்தில் என்ன செய்தீர்கள்?"

கைலாசநாதக் குருக்கள் தயங்கினார். பின்னர் மெதுவாகச் சொன்னார்: பயந்து ஓடிக்கோயிலுக்குள் புகுந்து கொண்டேன் சங்கிலி. உண்மையில் இப்போது நினைத்தாலும் வெட்கமாக இருக்கிறது எனக்கே காரணம் தெரியவில்லை..."

"நீங்கள் பிராமணர். க்ஷத்திரியரல்ல" என்றான் சிவசங்கிலி, அவரைச் சமாதானப்படுத்துவது போல.

குருக்கள் சற்று நாழிகை மௌனமாகவிருந்தார்.

"அது காரணமாகாது. பிறந்த நாட்டைக் காப்பதற்கு யாராக இருந்தாலென்ன! அந்நியர்கள் இங்கு காலடி வைக்கும்போது, நாட்டின் சுதந்திரத்தைக் காப்பதற்கு யாராக இருந்தால் தான் என்ன? இன்னுமொருதடவை யுத்தம் வந்தால் ...... நான் முடிவு செய்துவிட்டேன் சங்கிலி"

"என்ன செய்வீர்கள்?..."

"நானும் யுத்த களத்துக்குச் சென்று ஆயுதம் ஏந்திப் பறங்கிகளுக்கு எதிராகப் போர் செய்வேன்."

பெரிய ஆலயத்துக் குருக்களின் உடலில் ஒருவிதமான உத்வேகம் கொந்தளிப்பதைச் சிவசங்கிலி கண்டான் அவரது ஆவேசம் உண்மையில் நிஜமானது என்பதில் அவனுக்குச் சந்தேகமில்லை.

விழிகளில் வியப்புக் குடிகொள்ள அவரைப் பெருமிதத்துடன் பார்த்தான் அவன்.

"உயிர்க்கொலை பாவம் என்கிறீர்கள்..."

"முட்டவந்த பகைவனை வதை செய்யலாம்."

இருவரும் இருந்தாற்போல வாய்விட்டுச் சிரித்தனர்.

"இந்த நல்லூர் கந்தசுவாமி கோயிலும் பெருங்கோட்டைபோலத்தான் இருக்கிறது. பலமான உயர்ந்த மதில்கள் அரண்களாக நிற்கின்றன. இங்கிருந்தே நீங்கள் சண்டை செய்யலாம்" என்று சிவசங்கிலி கூறிவிட்டுச் சிரித்தான்.

"உனக்கு நான் சொன்னவை வேடிக்கையாக இருக்கிறது இருந்துதான் பாரேன்"

அவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருந்த வேளையில் மன்னாரிலிருந்து போர்த்துக்கேயப் பறங்கிகளின் யுத்தக்கப்பல்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

## இலட்சியங்கள்

வெந்தழலில் வேகாது
வெடிகுண்டால் சாகாது
மந்தைகள்போல்
மனிதரையே
வதைத்தாலும் சளைக்காது
சட்டங்கள் திட்டங்கள்
தீட்டிவிட்டால் அடங்காது
பொய்மிகுந்த செய்திகளைப்
புனைந்தாலும் போகாது
அணிதிரண்டு அடித்தாலும்
பணியாது பதுங்காது
உறுதியுடைய இலட்சியங்கள்
இறுதிமட்டும் இழக்காது
ஓயாது ஒழியாது
சாயாது சலிக்காது
பாயாது பாய்கின்ற
பசும்புனல் போல்
ஞாயாகப் பறக்கின்ற
கிட்டைப்போல், ஓடுகின்ற
நதியைப்போல், ஒளிருகின்ற
இதயத்தில் இரத்தத்தில்
உறைந்து
கரைந்து காலமெல்லாம்
கண்சொட்டி நிற்கின்ற
இலட்சியங்கள் வாழ்க

—ஆழ்கடலான்

சுத்தமான

விளைவு கற்பூரம்

சீனாவின் தொழில்நுட்ப வல்லுநர்களின் உதவியுடனும், சீனாவின் தரத்திற்கு அமையவும் முதன் முதலாக இலங்கையில் தயாரிக்கப்பட்டது.

இப்பொழுது தாராளமாக கிடைக்கும்!
மொத்த வியாபாரிகளுக்கு விசேஷ கழிவுண்டு!

தொடர்பு கொள்ளவும்:

விநியோகஸ்தர்:

பிரபா ட்ரேடிங் கம்பெனி,

81-31A, கபோஸ் லேன், கொழும்பு-11.

Phone: 29426

## இராசராசசோழப் பேரரசன் – 16

# இராசராசனின் திருக்கோயிற்பணி

### க.சி.குலரத்தினம்

உலகத்துக்குக் கருத்தாவாய சிவபெருமானையே முழுமுதற் கடவுளாகக்கொண்டு, அவரை வழிபட்டு உய்திபெறுவதற்கு வழிகாட்டும் சைவ நெறியையே மெய்ச்சமயம் எனக்கொண்டவர்கள் சோழர் எனவேதான் பொய்யடிமையில்லாத புலவர் பெருமக்களும் சோழரை, "மைவைத்த நெறியன்றி மற்றோர்நெறி கருதாத் தெய்வக் குடிச்சோழர்" எனப் போற்றினர். காவிரிநதியின் இருபக்கங்களிலும் கணக்கிடமுடியாத சிவாலயங்களை அமைத்தவர்கள் சோழர். முசுகுந்தச் சோழன் என்பான் திருவாரூரில் தியாகேசப்பெருமான் திருக்கோயிலை அமைத்தவன். கோச்செங்கட்சோழன் என்பான் எழுபது மாடக்கோயில்கள் கட்டியெழுப்பியவன். வளவர்கோன்பாவை என்று திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் புகழும் மங்கையர்க்குத்தனியரசியை எனக்கள் தெய்வம் என்று சேக்கிழார் சுவாமிகள் போற்றுவர். சோழன் புதல்வியாய்த் தோன்றிப் பாண்டியனை மணந்து அந்தத்திருநாட்டிற் தாம் புகுந்த நாட்டின் இருட்சமயத்தை நீக்கிச் சைவ ஒளிபெறச்செய்தவர். அப்பர் அடிகளுக்கு உதவியாய் நின்ற சைவம் காத்தவனும் ஒரு சோழன்.

### சிவன் கோயில்கள்

இடைக்காலச் சோழர் வரிசையில் முதல்வனாய விசாலயன் புதுக்கோட்டையில் விஜயாலய சோழேச்சுரம் எனும் சிவன்கோயிலை நிறுவியவன். இவன்மைந்தன் ஆதித்த சோழன் ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் காவிரிக்கரையெங்கும் சிவன்கோயில்கள் அமைத்தவன் இவனமைத்த சிவன் கோயில்களிலொன்று இவன் பெயரால் ஆதித்தசோழேச்சுரம் எனப்பெயர்பெற்றுள்ளது.

ஆதித்தசோழனின்மைந்தன் முதலாம் பராந்தகன் பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஐம்பதாண்டுகள் திருக்கோயிற் பணிபுரிந்தவன் செங்கற்களாலான பழைய சிவாலயங்கள் பலவற்றைக் கருங்கற் கோயில்களாக்கியவன். தங்கள் குலதெய்வமாய சிதம்பரத்து சபேசரன் உறையும் சபையைப் பொன் கொண்டு வேய்ந்தவன். இவனைப் பெருஞ்சைவப்புலவரான ஒட்டக்கூத்தர் அருமையாகப் புகழ்ந்துபாடியுள்ளார்.

"கோதிலாத் தேறல்
குனிக்கும் திருமன்றம்
காதலால் பொன்வேய்ந்த
காவலன்"

பராந்தகன் தன் இரண்டாம் மைந்தனும் கண்டராதித்தர் என்பாரை திருக்கோயிற்பணியில் வெகுவாக ஈடுபடுத்திவிட்டான். கண்டராதித்தர் சிவபெருமானுக்குத் தொண்டு செய்ததோடு, திருவிசைப்பா பதிகமும் பாடியுள்ளார். கண்டராதித்தரின் தேவியாரான செம்பியன் மாதேவியார் பல திருக்கோயில்களைக்கட்டிய தோடு, பல கோயில்களுக்கு நிபந்தங்கள், உபயங்கள் குவியல் குவியல்களாகவும் உபகரித்துள்ளார். இன்னும் சோழகுலத்தவர்களைச் சிவபக்தியில்விறைப்பாக ஈடுபடுத்தியுள்ளார்.

கண்டராதித்தரின் தம்பியார் அரிஞ்சயன் பெரிய சிவபக்தன் அரிஞ்சயனின் மைந்தன் சுந்தரசோழன். சுந்தரசோழனின் மைந்தன் இராசராசன் இராசராசனின் திருக்கோயிற்பணியின் கன்னி முயற்சிதான் பாட்டனார் அரிஞ்சயனின் நினைவாக அரிஞ்சயேச்சுரம் என்னும் அழகிய திருக்கோயிலாகும்.

### கருங்கற் திருப்பணி

திருக்கோயில்களைக் கருங்கற்கள் கொண்டு அமைக்கும் பெருமுயற்சி பல்லவர் ஆட்சிக்காலத்தில் தொடங்கியதாயினும், அக்கலை ஆதித்தசோழன் ஆட்சிக்காலத்தில் திருத்தமுற்றது. அன்றுமுதல் வளர்ந்து வந்த கலை இராசராசன் காலத்தில் வேகமுற்றது. இராசராசன் காலத்துக் கட்டடக்கலை புதுப்பொலிவு பெற்றதோடு, அயல் நாடுகளெங்கும் பெருமளவிற் பரவியும் நிலவியது. அக்காலத் திருக்கோயிற் கட்டடக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்வது தஞ்சைநகரின் இராசராசேச்சுரம் என்னும் பிரகதீஸ்வரர் ஆலயமாகும். கர்ப்பக்கிருகத்துக்குமேல் உயரமான விமானம் அழகுக்கலை ததும்ப அமைந்ததோடு, கர்ப்பக்கிருகத்து மூலமூர்த்தியாய சிவலிங்கமும் மிகவும் உயரமுள்ளதாகும். உயரமான சிவலிங்கத்துக்கு முன் படுத்திருக்கும் நந்தியும் அளவிற் பெரியதாகும்.

இராசராசன்காலத்துச் சிற்பிகள் உலோக வேலையிலும் கல்வேலையிலும் கைத்திறன் வாய்ந்தவர்களாயே இருந்தனர். அக்காலத்தில் உலோக வார்ப்புத்தொழில் உச்சநிலை அடைந்திருந்ததை அக்காலத்தவர் விட்டுச்சென்ற திருவுருவங்களால் அறியக்கூடியதாயுள்ளது, அக்காலத்துச் சுவர் ஓவியங்களும் சிறந்துவிளங்கின என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன.

### செம்பியன் மாதேவியார்

பத்தாம் நூற்றாண்டின் இறுதி முப்பதாண்டுக்காலம் செம்பியன் மாதேவியார் பெருமளவிற் சிவப்பணிசெய்த காலமாகும் இக் காலத்திலே இராசராசன் இளவரசனாக முதற்பதினைந்து ஆண்டுகளிலும் அரசனாகவும் பேராசிரியனாகவும் இறுதிப் பதினைந்து ஆண்டுகளிலும் நாட்டைக் காத்தவாறு கலைகளையும் வளர்த்தவன். செம்பியன் மாதேவியார் செய்வித்த திருவுருவங்கள் கலைப் பொலிவு நிறைந்தவை. பதினோராம் நூற்றாண்டின் முதற் பதினைந்து ஆண்டுகள் இராசராசன் சிவப்பணி புரிவதில் மேலதிகமாக ஈடுபட்டிருந்தவன். அக்காலத்தில் உண்டான கலைவளர்ச்சி பெரிது. அக்காலத்துச் செய்யப்பெற்ற நடராசவடிவங்கள் மிகவும் அழகானவை.

இராசராசன் காலத்துக்கு முன்னர் செய்யப்பெற்ற விக்கிரகங்களை அக்காலத்து மக்கள் படிமம், பிரதிமம் எனவே வழங்கிவந்தனர் ஆனால் இராசராசன் காலம்முதல் விக்கிரகங்களான பிரதிமங்கள் திருமேனிகள் என வழங்கப்பெற்றன, திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி என்று சகலாகம பண்டிதரான அருணந்தி சிவாசாரியாரும் அந்தப் பதத்தையே கையாண்டுள்ளார். பிரதிமம்என்னும் பதம் கனித உருவங்களைக் குறிப்பதற்கு வழங்குவதாயிற்று. ஆனால் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என நிலவிய தமிழ்ப் பண்பாட்டில் வளர்ந்த குந்தவைப்பிராட்டியார் தம் தாய் தந்தையர்களுக்குச் செய்த உருவங்களைத் திருமேனிகள் எனவேவழங்கவைத்துள்ளார். இராசராசனின் திருக்கோயிற் பணி தமிழ் நாகரிகத்தைக் கோயில் நாகரிகமாக மலரவைத்தது என்பதை வரலாற்றாசிரியர்கள் எல்லோரும் ஒருமுகமாக ஒத்துக்கொள்கின்றார்கள் இராசராசன் காலத்திலே அறுபதுக்கும் அதிகமான திருமேனிகள் திருக்கோயில்களுக்கு உபகரிக்கப்பெற்றுள்ளன அத்திருமேனிகளின் உயரம் நிறை அமைப்பு முதலிய எல்லா விபரங்களும் கல்வெட்டுக்களிற் குறிக்கப் பெற்றுள்ளன.

### பஞ்சலோகத் திருமேனி

இராசராசன் சில திருமேனிகளைத் தனிப்பொன்னாலும், தனி வெள்ளியினாலும் செய்வித்ததும் உண்டு. பஞ்சலோகத்தாலான திருமேனிகள் மிகப்பலவாகும். இராசராசன் செய்த திருக்கோயிற் பணியில் அவனுடைய திருத்தமக்கையாரும் தேவிமார்களும் பணிப்பெண்களும் அரச அலுவலர்களும் பெருமளவிற் பங்களிப்புச் செய்துள்ளனர் பணிப்பெண்களுள் ஒருத்தியாய் நக்கன் நல்லத்தடிகள் என்பாள் கோனேரிராசபுரத்துத் திருக்கோயிலுக்கு உமாமகேசுவரர், சண்டேசுரர் திருமேனிகளை உபயஞ்செய்துள்ளாள் எனக் கல்வெட்டுக் கூறுகிறது.

இராசராசன் காலத்து உருவான பஞ்சலோகத் திருமேனிகளுள் நடராச வடிவம் என்னும் ஆடவல்லான் திருமேனிகள் பலவிதமானவை. அவற்றின் அமைப்பையும், அழகையும் கண்டு ஆனந்தமடைந்த ஆங்கிலேயர் தங்கள் ஆட்சிக்காலத்தில் சில திருமேனிகளைக் கடத்திச்சென்று லண்டனில் உள்ள விக்ரோறியா அல்பேட் நூதனசாலையை அலங்கரிக்க வைத்துள்ளனர். இராசராசன் இலங்கையில் பொலனறுவைச் சிவாலயத்துக்கெனச் செய்த திருவுருவம் கொழும்பிலுள்ள நூதனசாலையை அலங்கரிக்கின்றது இவ்வாறே சென்னையிலும் பல திருவுருவங்கள் காட்சிச்சாலையை அலங்கரிக்கின்றன. இன்னும் அமெரிக்காவிலுள்ள பொஸ்ரன் கலைக் கூடத்தில் சேகரிக்கப்பெற்றுள்ள திருவுருவங்கள் மிகப் பலவாகும்.

### ஆடை அணிகள்

இவ்வாறு இராசராசன்காலத்துத் திருக்கோயில்களுக்கு உபகரிக்கப்பெற்ற செப்புத் திருமேனிகள் யாவும், பல்லவர் காலத்துப் படிமங்களிற் பார்க்க உருவத்தில் பெரியனவாயும் திருமுகத்தோற்றம் பாவனை, உறுப்புக்களின் அமைப்பு முதலிய எல்லா அமைவுகளிலும் ஏற்றமுள்ளனவாய் உள்ளன என்று கலைப் புலவர்கள் கணித்துள்ளார்கள். இத்தகைய செப்புத் திருமேனிகளினூடாக இராசராசன் காலத்து நாகரிகப் போக்கிலமைந்த ஆடையணிகள் முதலியவற்றைக் கண்டறியலாம் இங்ஙனம் திருமேனிகள் காட்டிநிற்கும் ஆடையணிகள் ஆலயங்களிற் காணப் பெறுதனவாயினும் கலைஞர்

(10-ம் பக்கம் பார்க்க)

## மாற்று

(காலாண்டு சஞ்சிகை)

"மாற்று" செப்ரெம்பர் மாத இதழ் வெளியாகியுள்ளது. பல முற்போக்கான இலக்கிய விடயங்களைத் தாங்கி வந்திருக்கும் இச் சஞ்சிகை ஏனைய சஞ்சிகைகளை விட ஒரு புதுமையாக படைக்கப்பட்டுள்ளது.

மலையன்பனின் 'மடிந்து போன மைந்தனுக்கு', மடிந்து போன மக்கள் யுத்த வீரனுக்கு' என்ற கவிதைகள் இந்த நெருக்கடி காலத்தில் இச் சஞ்சிகையில் வெளியிடப்பட்டது பொருத்தமானதாகும்.

சினிமாவை வைத்துச் சஞ்சிகை வெளியிடும் இக் காலத்தில் 'மாற்று', போற்றுதற்குரிய சமகாலப் பிரச்சனைகளைத் தொட்டு படைக்கப்பட்டுள்ளது.

நாவலடி ஒழுங்கை: திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இருந்து வெளிவரும் மாற்றின் விலை 3/50 சதம் மட்டுமே.

மாற்றின் குறிக்கோள் 'கலையெல்லாம் விலை போகும் விளம்பரமாய் ஆகாமல் மலை போலவுள்ள மக்களிடர் நீக்க உதவ வேண்டும்' என்பதாகும்.

இந்த விடயத்தில் 'மாற்று' எப்படித் தனது பங்கைப் படைக்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

என். கே. துரைசிங்கம்

## மணிமகுடமாய்த் திகழ்ந்த

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

முமடைந்தது என்று கூறின் அது மிகையாகாது. மாணவரின் ஒழுக்கத்தில் மிகவும் கண்டிப்பாக இருந்தார் இதனை நிரூபிக்க ஒரு நிகழ்ச்சியை உதாரணமாகக் கூறலாம்;

பின்னேரத்தில் கற்றல் முடிந்து எல்லோரும் வீடு செல்வதற்கு முன் கல்லூரி மேல்மாடி மண்டபத்தில் குழுமி நின்று பிரார்த்தனை செய்வது வழக்கம். பிரார்த்தனையில் ஒருவர் மேடைமேலேறித் தேவாரமும் புராணமும் சொல்லி, 'நமப்பார்வதிபதே' என்று கூற மற்றவர் 'அரஹரமகாதேவா' என்று சொல்லி விடைபெறுவதே நிறுவிய ஒழுக்க முறைகளுள் ஒன்று, பல மாணவர்கள் இது தேவையற்ற வேலை என்று எண்ணி, இந்நிகழ்ச்சிக்கு நிற்காமல் மூலைப்படிகளால் இறங்கி ஓடினார்கள். நானும் ஓடினேன் வாசிகசாலையில் நின்று கொண்டிருந்த அதிபர் இதனைக் கண்டதும் கை தட்டி ஓடியவர்களை வரும்படி அழைத்தார். சில மாணவர்கள் ஓடித் தப்பிவிட்டனர். நானும் வேறு சில மாணவரும் அதிபரின் கை தட்டலுக்கு மதிப்புக் கொடுத்துத் திரும்பினோம்.

"Get in" என்றதும் மேடை மீது ஏறி வரிசையாக நின்றோம். சிவபெருமானின் முதுகில் விழுந்தது போல எம்மவர் முதுகுகள் மீதும் ஒவ்வொன்று அடித்தடியால் விழுந்தது. அதன் பின் ஒழுங்காக நடந்துகொண்டோம். பிற்காலத்தில் எமது அதிபர் அரசாங்கசபையில் ஓர் அங்கத்தவராக நாட்டு மக்களுக்குச் சேவை புரிந்தார்.

அக்காலத்தில் இந்துக்கல்லூரி நிர்வாகம் Hindu College Board என்ற சபையால் நடாத்தப்பட்டது. மதிப்பிற்குரிய திரு. சபாபதி அவர்கள் முகாமையாளராகக் கடமையாற்றினர். பிரித்தானியர் ஆட்சி திறமையாக நடைபெற்ற காலமது. ஒரு முறை கல்லூரிக்கு அக்காலத்திலிருந்த தேசாதிபதி வருகை தந்தார். முதலாவது உலக மகாயுத்தம் முடிவுற்றதும், சர்வதேச நாடுகள் உடன்படிக்கைப்படி [Armistice, League of Nations] சமாதானம் கொண்டாடப்பட்டது. சமாதானக் கொண்டாட்டங்களில் எல்லாப் பாடசாலைகளும் கலந்து கொண்டன. இந்துக் கல்லூரி மாணவர்களும் இதில் கலந்து கொண்டனர்.

பிரித்தானியக் கொடியான யூனியன் ஜாக் (Union Jack) கொடியைத் தாங்கிக்கொண்டு எல்லோரும் யாழ் முற்றவெளி மைதானத்தைச் சென்றடைந்தோம். மைதானத்தில் ஓர் உயரிய மேடை; அதில் பிரித்தானிய நிர்வாகஸ்தர்களும், பாடசாலை அதிபர்களும் வீற்றிருந்தனர். பெரும்பாலானோர் வெள்ளையர்கள். மற்றக் கல்லூரி அதிபர்கள் ஆங்கிலத்தில் பேசினார்கள். அவர்கள் வெள்ளையர்கள் எமது அதிபர் நெவின்ஸ் செல்லத்துரை தமிழில் சொற்பொழிவாற்றினார்.

அக்காலத்தில் கே. கே. எஸ். வீதியில் பாடசாலை கல்லூரியின் முகப்பு அமைந்திருந்தது; கல்லூரியின் முகப்பின், உச்சத்தில் கலைமகளின் திருவுருவம் அமைக்கப்பட்டுத் திருவாசியின் மீது, "கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற திருவள்ளுவர் வாசகம் வரையப்பட்டிருந்தது. இக்குறளைத் தெரிவு செய்தவரும் எமது அதிபர் என்றார்கள். இந்து சாதன அச்சுக்கூடம் கல்லூரிக் கட்டிடத்துடன் கூடியது. அதனுடைய வாயிலும் கே. கே. எஸ். வீதியில் பக்கம் அமைந்திருந்தது. திரு கௌரவ சபாபதி 'Hindu Organ' என்னும் ஆங்கிலப் பத்திரிகையின் பத்திராதிபர். ஆசிரியர் வி. ரி. சம்பந்தர் 'இந்து சாதனம்' என்னும் பத்திரிகையின் பத்திராதிபர்.

கல்வியை நிறுத்தித்தொழில் தேடச் சென்ற மாணவர்களிற் பலர் சிங்கப்பூர், மலாய் நாடு போன்ற பல இடங்கட்குச் சென்று திரவியம் தேடினர் மாணவர்களிற் பலர் சிறந்த கல்விமான்களாகவும் அரசியல்வாதிகளாகவும் அரசாங்க உயர் அதிகாரிகளாகவும் கடமையாற்றி யாழ். இந்துவின் புகழை மேலோங்கச் செய்தனர்.

எமக்குக் கல்வியறிவூட்டிய யாழ். இந்துக் கல்லூரிக்கும் அதன் சார்பில் கடமையாற்றிய சான்றோருக்கும் வணக்கங்கள் கூறி இக்கட்டுரையை முடிக்கிறேன்.

'ஊழியல சென்றிடினும்
என்றும் நிலைத்து நிற்கும்
யாழிந்து வாழிய வாழியவே
என்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக!

## கந்தவேள்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டன நாற்பத்துமூன்று மரக்கலங்களிலும் இருநூற்று ஐம்பது வள்ளங்களிலும் போர் வீரர்கள் நிறைந்திருந்தனர். அப்படைக்கு அந்திரே பூர்த்தாடு டி மென்டொன்சா என்பவன் தலைபதியாக இருந்தான்.

உண்மையில் அது ஒரு பெரும் கப்பற் படையாகும். 1200 பறங்கி வீரர்கள் அதில் இருந்தார்கள். அவர்களை விட 3000 லாஸ்கொறின் எனும் சிங்கள வீரர்கள் இருந்தார்கள். சிங்கள வீரர்களுக்கு விக்கிரமசிங்க முதலி என்பான் தலைபதியாக இருந்தான்.

குருமார்களின் ஆசியுடன் அப்பெரும்படை யாழ்ப்பாணம் நோக்கிப்புறப்பட்டது.

"சந்தியாகு.... என வீரர்கள் முழக்கமிட்டனர்.

முன்னணியில் மிதந்த பெரும் மரக்கலத்தில் பூர்த்தாடு நின்றிருந்தான்.

"வேத சாட்சிகளின் படுகொலைக்குப் பரிகாரம் காண்" என மன்னார் பிரதம குருவானவர் கூறியவை அவன் காதுகளில் ஒலித்தன! "அஞ்ஞானிகளாக இருக்கின்ற யாழ்ப்பாண இராச்சியத்து மக்களை அந்த இருளிலிருந்து காப்பாற்ற வேண்டும்... பசாசு வணக்கத்தைக் கைக்கொண்டிருக்கின்ற அம்மக்களைச் சாத்தானின் பிடியிலிருந்து காக்க வேண்டும்..."

பூர்த்தாடு வடதிசையை ஆவலுடன் பார்த்தான்.

# 96வது ஆண்டில் யாழ் இந்து—(2)
## மிகப் பழைய மாணவனின் அனுபவம்

இக்கட்டுரையாளரான திரு. வே. தில்லையம்பலம் அவர்கள் இரு வாரங்களின் முன் அமரரானர். அவர் அமரத்துவ மடைவதற்குச் சில நாட்கள் முன்பாக இதனை அவர் எழுதினர். இதன் முதற் பகுதி கடந்த வாரம் வெளியானது.

பசுபதிக் குட்டிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில்: ஒரு பிராமண வீடு. வீட்டுக்குமுன் ஒரு புன்னை மரம்; இங்கே ஓர் ஐயர் வாழ்ந்தார். இவரது பெயர்மறதியிற் போயிற்று. இவர் எங்கள் ஆசிரியர்களுள்ஒருவர் மெலிந்த உடம்பினையுடையவர். இவருக்குப் 'பயிற்றங்காய் ஐயர்' எனத் திருநாமஞ் சூட்டினர் மாணவர்.

இவர் இத்திரமும் கற்பித்தார். வரைதல் வகுப்புக்குச் சித்திரப்பொருள் கொண்டு வரல்வேண்டும். அச்சித்திரப் பொருள்களைப் பார்த்து வரையச் சொல்வது இவருடைய வழக்கம் ஒரு நாள் மாணவன் ஒருவன் ஒரு 'பயிற்றங்காய்' ஒன்றைக் கரும்பலகையில் சித்திரப்பொருளாகக் குற்றினன். ஆனல். மாணவத்தலைவன்

யாழ். இந்துக்கல்லூரியிலேயே பயின்ற அதிபர் நெவின்ஸ் செல்லத்துரையின் அபிமானத்தைப் பெற்ற ஆசிரியர்களானவர்களில் திருவாளர்கள் நல்லைநாதன். முத்துசாமி. பொன்னையா ஆகியோரின் பெயர்களையும் குறிப்பிடலாம். திரு. நல்லைநாதன் பிற்காலத்தில் டாக்டர் நல்லைநாதன் எனத் தீர்க்காயுசுடன் வாழ்ந்தவர். இந்திய ஸாயி பாபாவை எம்மவருக்கும் அறிமுகப்படுத்தியவர் அன்னரின் தம்பியார் திரு. முத்துச்சாமி இவர் 'சாண்டோ' எனவும் 'Advocate' எனவும், சிவநெறிக்காவலர் எனவும்பட்டங்கள் பெற்றவர், சைவசித்தாந்த Rock என்ற நாமம் சூட்டத்தகுந்தவர் எனப் பலராலும் புகழப்பட்டார்.

திரு ராமப்பிள்ளை மாஸ்ரர் இலத்தீன கற்பித்தார். அவரு

யின்றியே பட்டதாரியானர். 'Self Made Man' எனச்சொல்லத் தகுந்தவர், இவர் இலண்டன் B A. தேர்வில் தேறியவர். மாணவர்களைப் பொறுத்தவரை கொஞ்சம் கடுமையானவர். ஆகவே 'வைரவர்' என்னும் திருநாமம் சூட்டப்பெற்ருர். இவரை அகராதிச் சங்கரப்பிள்ளை என்றும் கூறினர் வேறொரு மாஸ்டருடன் பந்தயங்கூறி Dictionory ஐ மனப்பாடஞ் செய்தவர்.

யாழ். இந்து மாணவராகத் திகழ்ந்து ஆசிரியராகியவர்களுள் கொக்குவிலைச்சேர்ந்த திரு பொன்னையாவும் ஒருவர். கணிதத்தில் மேதை. மாணவனாக இருந்தபோதே வழமையான ஆசிரியர்களில்லாத விடத்து இவர் பதில் ஆசிரியராகக் கடமைபுரிந்தார். பிற்காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்டம் பெற்ருர். இவர்கலாநிதிப் பட்டம் பெறுவதற்காக எழுதிய நூல்தான் ,,THE SAIVA SITITHANTHA PHILOSOPHY' இது இந்துசமய பாடங்களில் போதிக்கப்படுகிறது. இவர் ஒய்வு பெற்றபின் இந்து சமய சாஸ்திரங்களையும், உபநிடதங்கள், பகவத்கீதை என்பன உட்பட்ட பல வேதாந்த

### அமரர் வே. தில்லையம்பலம்

நூல்களையும், தமது இல்லத்திலும் நாவலர்மடம் போன்ற இடங்களிலும் கற்பித்துச் சமய வளர்ச்சி செய்தவர் ஆங்கிலம் தர்க்கம், சமஸ்கிருதம், தமிழ் முதலியவற்றில் போதிய தகைமை பெற்றிருந்தார்.

திருவாளர் வி. முத்துக்குமாரு என்பார் தெல்லிப்பழையைச் சேர்ந்தவர். அக்காலத்து யாழ்ப்பாண மக்களுள் MA பட்டம் உடையோர் அருமையிலும் அருமை. திரு. முத்துக்குமாரு அவர்கள் MA பட்டதாரி. அதுவும் இந்துக் கல்லூரியில் ஆசிரியர் என்ருல் அக் கல்லூரிக்குப் பெருமை தானே; எதுவும் கற்பிக்கக்கூடிய ஆற்றல் கொண்டவர். பொதுவாக, ஆங்கில மொழியைல். ஆங்கில இலக்கியம், வரலாறு ஆகிய பாடங்களை சுவையுடனும் கவர்ச்சியுடனும் கற்பிக்கக்கூடியவர். கற்பித்தல் இவருக்கோர் இலகுவான தொழில். இவர் கமத்தொழிலிலும் ஈடுபாடுடையவர். வேறு கல்லூரிகளிலும் இவர் ஆசிரியராகக் கடமையாற்றினர். நாலு கட்டு. நீண்ட கோற் அணிந்து அதன்மேல் சால்வை அணிந்து, காலணிகளுடன் தோற்றமளிப்பார். கற்பிக்கும் போது சினமோ, சீற்றமோ கிடையாது கற்பித்தல் தமது கடமை அதனை ஏற்றுக்கொள்வல் மாணவர் கடமையென நிஷ்காம கர்மமாகக் கடமையாற்றுபவர் இவர் யாழ் இந்துக் கல்லூரியின் உப அதிபராகவும் மதிக்கப்பட்டவர்.

தலைவாளியைப் பிறப்பிடமாகக்கொண்டவர் திருவாளர் நாகலிங்கம் B A. ; வேட்டி, கோட், சால்வை, காலணிகள் என்பன அன்னரின் அணிகள், சாந்தமே உருவானவர் ஆங்கில இலக்கியம் கற்பிப்பதில் இவருக்கு இணையில்லை என்ருல் அது மிகையல்ல. ஷேக்ஸ்பியர் நாடகம் கற்பிப்பதில் மிகவும் திறமைகாட்டும் இயல்பினர். விளக்கவுரை சொற்பொழிவு போல இருக்கும் தன்மையது. பேசுகில் ஓசை உயர்ச்சியடையவில்லை வகுப்பில் அவர் விளக்கவுரை நிகழ்த்தும் போதெல்லாம் வியப்புத்தரும் பேராண்மை திகழக்கூடியது இவர் வரலாறும் கற்பிக்க வல்லவர். பிற்காலத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி ஒய்வுபெற்ருர். இவரிடத்தில் கேள்வி கேட்டு விடை பெறும் முறையை எதிர்பார்க்க முடியாது. வகுப்பு முடியும்வரையும் ஒரேசொற்பொழிவு தான். ஆனல் சொற்பொழிவு முழுமையானதாகவே இருக்கும்.

திரு. வி. ரி. சம்பந்தன் என்பவர் மட்டுவில் வேற்பிள்ளைப் புலவரின் புதல்வர். தமிழில் அநேக நூல்களை எழுதியவர். பொதுவாக அவை மாணவருக்குரியவை; பாலபாடம் புத்தகங்கள் பல எழுதியவர் அவை எமது கல்லூரியில் கற்பிக்கப் பட்டவை. "பால பஞ்சி" என்ற இவரின் படைப்பு E.S L.C. வகுப்பில் கற்பிக்கப்பட்டது. அவரே அதனைக் கற்பித்தார் கிருஷ்ணன் தூது. திரௌபதை துகில் உரிதல் முதலிய விவ்லி பாரதச் சருக்கங்களுக்கு இவரே உரை எழுதினர், "இந்துசாதனம்" என்ற பத்திரிகைக்குப் பத்திராதிபராகத் திகழ்ந்தார். நகைச் சுவைக் கதைகளையும் நவீனங்களையும் எழுதியவர். "நேசரத்னம்" என்ற கதையை இவரே எழுதினர். கல்லூரி நாடகங்களிலும் இவர் பங்கு பற்றினர். நீண்டகாலம் இவர் யாழ் இந்து ஆசிரியராகக் கடமையாற்றினர்.

தாவடியைச் சேர்ந்த திரு. பொன்னையா என்பவர் ஒரு பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர் இலக்கணம், இலக்கியம் நன்ருகக் கற்பிக்கும் இயல்புடையவர். உயர் வகுப்பு மாணவர்களுக்கும் இவரே தமிழ் கற்பித்தார் பாரதம், இராமாயணம் ஆகியவற்றின் கதைகளைத் தமது இனிய குரலின் உதவி கொண்டு மாணவருக்குக் கூறி அவர்களை ஊக்குவித்தார். நடிப்புக்கலையிலும் இவர் உறந்து விளங்கினர். தேவாரத்தைப் பண்முறைப்படி கற்பித்தார். தோற்றத்தில் அழகியவர். பின் மயிர் சுருண்டு நீண்டு இருந்தமையால் சுருளி பொன்னையா எனப்பட்டார் பிற்காலத்தில் வேறு பாடசாலைகளிலும் கற்பித்தார்.

திரு. நாகிப்பிள்ளை என்பவர் கீழ் வகுப்புகளில் கடமையாற்றினர். இவர் சின்னஞ் சிறு குழந்தைப் பிள்ளைகளுக்குக் கல்வி தொடக்கிக் கற்பிப்பதில் வல்லுநர். இந்துக் கல்லூரி கட்டப்படுவதற்கு முன்பே அவ்விடத்தில் ஒரு சிறு திண்ணை அமைத்துக் கல்வி பயிற்றிக்கொண்டிருந்தார் என்று பலர் சொல்ல நான் கேட்டதுண்டு.

திருவாளர் சபாரத்தினம் இணுவில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர் எங்கள் காலத்தில் "Head Master" என்று அழைக்கப்பட்டார். விளையாட்டுத்துறை ஆசிரியராகவும், சாரணர் பிரிவு ஆசிரியராகவும், ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியராகவும் திகழ்ந்தார். உயரம் பருப்பம். உறுதி. அழகு கொண்டதோற்றமுடையவர்! சேர். பொன் இராமநாதன் உடை உடுத்திக் கொள்ளும் மாதிரியை இவர் பின்பற்றினர் எமது அதிபர் இல்லாத காலத்தில் இவர் நீண்ட காலமாகப் பதில் அதிபராகக் கடமையாற்றினர்.

கல்லூரியின் மணி மகுடமெனத் திகழ்ந்தவர் எமது அதிபர் திருவாளர் நெவின்ஸ் செல்லத்துரை இந்துக்கல்லூரிச் சஞ்சிகைகள் பலவற்றில் இவரைப் பற்றிப் பலவாறு புகழ்ந்து கூறப்பட்டிருப்பதை நான் அறிவேன். இவர் ஒரு கிறிஸ்தவரெனினும் சைவத்தை மாணவர்கள் நன்கு விளங்கி அநுட்டிக்குமாறு அரும்பாடுபட்டார். ஒழுக்கும் ஒழுக்கமும் நிலைபெற ஆவன செய்தார், Silver Tongued Orator" எனப்புகழப்பட்டவர். அன்னரின் ஆங்கிலச் சொற்பொழிவு யாரையும் வசீகரப் படுத்துந் தன்மையது;

கண்டி மாநகரத்துத் திறினிற்றிக் கல்லூரியிலும் (Trinity College) சில காலம் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றினர் ஓர் அதிபருக்கு இருக்கவேண்டிய தகைமைகள் யாவும் அன்னரிடத்தில் காணப்பட்டன சேர். பொன். இராமநாதனின் உடையில் அன்னரின் உயர்ந்த நிமிர்ந்த தோற்றமும் அவரது போதனா சக்தியும், நிர்வாகத்திறமையும் ஓர் ஒப்பற்ற தலைவனுக்குரிய தகைமைகளெனக் காட்டி நிற்கின்றன,

'நெவின்ஸின் தலைமையில் யாழ். இந்து இலங்கையில் மேன்மையும் முன்னேற்ற

[8-ம் பக்கம் பார்க்க]

# மணிமகுடமாய்த் திகழ்ந்த
# நெவின்ஸ் செல்லத்துரை!

## 'யூனியன் ஜாக்' கொடியுடன் முற்றவெளிக்கு அணிவகுப்பு!

ஆசிரியருக்கு அஞ்சி அதனை எடுத்து விடியது எனது உள்ளத்தில் இன்றும் நினைத்துள்ளது.

திரு. ஏ.கே.பொன்னம்பலம் என்னும் ஆசிரியர் யாழ் இந்துவின் நீண்டகால ஆசிரியர்களுள் ஒருவர்; இவர் எனது பிள்ளைகளையும் கற்பித்துள்ளார். இவர் நிரந்தரமாக 5ம் தரத்து ஆசிரியராகவே இருந்தார். அடியும் போடுவார். தமிழ், கணிதம் இவருடைய பாடங்கள். நாடகங்களில் நடித்துப்புகழ் பெற்றவர், நன்ருகப் பாடுவார் குடணன் சரித்திரத்தில் குமணனாக நடித்துப் புகழ் பெற்ருர் திரு. எஸ்.பி இராசையா என்னும் ஆசிரியர் இந்துக்கல்லூரியிலேயே கற்றுஆசிரியரானர் அக்காலத்தில் இந்துக்கல்லூரியிலேயே கற்றவர்களுக்கு ஆசிரியப்பதவி வழங்குவது அதிபரின் பெருந்தன்மையாயிருந்தது இவ்வாறு அதிபர் நெவின்ஸ் செல்லத்துரையின் சிபாரிசில் வந்த ஆசிரியர்களுள் திரு. எஸ். பி. இராசையாவும் ஒருவர்.

டைய மகன் அல்பேட்டும் இலகானம் கற்பித்தார். திரு. அரியகுட்டி மாஸ்ரர் சில காலம் கற்பித்துப் பின் புறக்கிருசியாகக் கடமை புரிந்தார்.

திரு. கே. ஐயாத்துரை யாழ். இந்துக்கல்லூரியில் விஞ்ஞானப்பகுதியில் ஆசிரியராகக் கடமையாற்றிய பின், யாழ். மத்திய கல்லூரிலும் ஆசிரியராகவிருந்து இறுதியில் புறக்கிருசியாகத் திகழ்ந்தவர். யாழ்.நகரசபைத் தலைவராகவுமிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

அளவையூர் திரு. கார்த்திகேசு மாஸ்டர் முதலில் கொக்குவில் இந்துவித்தியாசாலையில் கற்பித்துப்பின் யாழ் இந்துவிலும் ஆசிரியரானர். ஈற்றில் பாடசாலைப் பரிசோதகராகவிருந்து இளைப்பாறினர்.

அளவையூரைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை மாஸ்ரர் கணிதம், ஆங்கிலம் இரண்டிலும் விற்பன்னர் ஒழுக்கத்தைப் பேணுபவர் சுயமாகவே, ஆதாவது ஆசிரியரின் துணை

## கடல்

பூமகள் தன்னின் முக்கால் உடலினைப்
போர்த்த எழிலுடை வண்ணக் கம்பளம்
வானவன் வடிவ தனதுடல் நிறமாய்
பேரலை எழுப்பியே ஆர்த்திடும் ஆழி
பருகிட முடியா உவர்மிகு நீரின்
அடியே விரித்திடு மர்மம் அறிந்திட
முடியா ஆழம் பொருந்திடு கடலாம்
விசிடு வங்கிக்குச் செல்வமே கொடுத்திடும்
தன்மை பொருந்திடு தனிப்பெரும் பொக்கிஷம்
பாவை இப்பெண் இன்றேல் பாரினில்
மழையும் பெய்திட வழியும் உண்டோ!

—வ. செ. சிவசுந்தரம்




யாழ் மக்களுக்கு

ஓர் நற்செய்தி

வெளிநாட்டுப் பயணத்திற்கான
விமான டிக்கட்டுகள், பாஸ்போட்,
விசா, பிரயாணிகள் காசோலைகள்
மற்றும் பிரயாணங்களுக்குத் தேவையான
சகல ஒழுங்குகளும்
செய்துதரப்படும்.

தொடர்பு கொள்ளுங்கள்:

விஜயமாலா ரவல்ஸ்,
213, 215, செட்டியார்தெரு, கொழும்பு 11.
தொலைபேசி: 547205

நேரில் தொடர்பு கொள்ள முடியாதவர்கள் யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:

திருமதி சி. கஜமுகலிங்கம்,
ரஜனி நிலையம், ஊரியாட்டி, சுன்னுகம்.

(1935)


உங்கள் பயிர்களை இதுவரை பூச்சிபுழு
தாக்கத்திலிருந்து சிறப்பாக பாதுகாத்த
ரெட்ஸ்டார்
அனோறன்
இப்பொழுது புதிய
500 மி.லி. கொள்கலன்களில்
வெளிநாட்டிலிருந்து
நேரடியாக இறக்குமதி
செய்யப்பட்டுள்ளது.
விலை- ரூ. 129/-
உருளைக்கிழங்கு, மிளகாய்,
வெங்காயம், போஞ்சி, நெல்,
கோவா, மற்றும் காய்கறி
பயிர்களில்
அழுக்கணவன் உட்பட பூச்சிப்
புழுக்களை சிறப்பாகக் கட்டுப்படுத்தும்.
ANGLO-ASIAN AGRO CHEMICALS
அங்லோ-ஏஷியன்
பேர்டிலைசர்ஸ் லிமிட்டட்
சாற்றட் பேங்க் கட்டிடம், கொழும்பு 1.

## பாத்திரங்கள்

- ★ தியாகவல்லி
- ★ அன்பரசன்
- ★ இயேசுதாசன்
- ★ பாட்டி
- ★ பிச்சைக்காரன்

### காட்சி 1

தியாகவல்லியின் இல்லம். மகன் அன்பரசன் சன்டேஸ்கூலுக்குப் புறப்படுவதற்கு ஆயத்தமாகிறான். தாய்மகனை அழைக்கிறார்.

**தியாகவல்லி!**

அன்பரசா! இங்கே வா மகனே! சன்டேஸ்கூலுக்குப் போகமுன்பு இந்தத் தோசையைச் சாப்பிட்டு விட்டுப்போ.

**அன்பரசன்:**

களிசான்போட்டுக்கொண்டு நிற்கிறேன். இதோ வந்திட்டேன் அம்மா! (என்று கூறிக்கொண்டு தாயிடம் வருகிறான்)

**தியாகவல்லி;**

கெதியில சாப்பிட்டு விட்டுப் புறப்படு; நேரமாகிறது. (தோசைப்பெட்டியை நீட்டுகிறார்)

**அன்பரசன்;**

(தோசைகளை எண்ணிக்கொண்டே) இதென்ன அம்மா! என்னைச் சாப்பாட்டு ராமன் என்று எண்ணுகிறீர்கள்?

**தியாகவல்லி:**

ஏன்டா அப்படிச்சொல்கிறாய்? ஏழு தோசைகள் தானே இருக்கின்றன. ஏதோ அளவுக்கு மிஞ்சிய சாப்பாடு என்று பேசுகிறாயே.

**அன்பரசன்!**

காலையில் ஏழு தோசைகளை மட்டுந்தானே வாங்கினீர்கள் அம்மா! வாங்கிய அத்தனையும் நான் மட்டுமே சாப்பிட்டால் நான் சாப்பாட்டுராமன் தானே உங்களுக்குப்பசி இல்லையா? எனக்கு மட்டுந்தான் பசியா?

**தியாக:**

இன்னும் கொஞ்சம் கூடுதலாகத்தோசை வாங்கக்காசு கையில் இல்லை: கடன்படவும் கூடாது: நான் விரைவில் சமைத்துச் சாப்பிடுவேன். நீ கவலைப்படாதே.

**அன்பர:**

பெற்றதாய் பசித்திருக்க நான்மட்டுமே சாப்பிடுவது அறமாகுமா அம்மா! நீங்கள் நாலை எடுத்துக்கொண்டு எனக்கு மூன்று தோசைகளைத் தாருங்கோ.

**தியாக!**

நீயும் உன் அப்பாவைப் போலவே அறம்பற்றிப்பேசத் தொடங்கிவிட்டாய். உன் அப்பா உயிரோடிருந்தால் நாம் இந்த அவல நிலைமையில் வாடுவோமா?

**அன்பு!**

அப்பாவை சிறிது ஞாபகம் இருக்கிறது. அவரைக் கத்திக் குத்துக் காயங்களுடன் சவப்பெட்டியில் வைத்திருந்ததை நான் மறந்து விடவில்லை அம்மா? யார் அம்மா அவரைக் குத்தியவர்கள்? அப்பாவின் பெயர் அரசகேசரி அல்லவா அம்மா?

**தியாக!**

ஆம்மகனே! அவர்பெயருக்கேற்பவே அஞ்சாநெஞ்சுடன் அறத்திற்காகப் போராடினார். இனக்கலவரத்தின்போது இளநங்கை ஒருத்தியைக் காடையர்களிடமிருந்து காப்பாற்ற முனைந்தபோது அக்கயவர்கள் கத்தியால் குத்தி அப்பாவின் உயிரைக்குடித்துவிட்டார்கள்.

**அன்பு!**

அந்த அக்கிரமம் செய்த காடையர்களுக்கு அரச தண்டனை கிடைக்கவில்லையா அம்மா?

**தியாக:**

அறத்தின் அடிப்படையில் அமைந்த அரசாக இருந்திருந்தாலல்லவோ அவர்களுக்குத் தண்டனை கிடைத்திருக்கும். வேலியே பயிரை மேய்ந்தது என்று சொல்வது போன்ற அவலநிலைமை நிலவும்போது நாம் நீதியை எதிர்பார்க்க முடியுமா?

**அன்பு!**

அப்பா அரசாங்க சேவையில் உத்தியோகம் பார்த்ததாக முன்பு சொல்லியிருந்தீர்களே. அம்மா எங்களுக்கு பென்சன் இல்லையா அம்மா?

**தியாக!**

பத்துவருட சேவை பூர்த்தியானவர்களுக்குத் தான் பென்சன் கிடைக்கும். உன் அப்பா ஒன்பது வருடங்கள் மட்டுமே சேவைசெய்திருந்தார். எனவே எமக்குப்பென்சனில்லைமகனே! உனது அப்பா அடிக்கடிசொல்லுவார் வறுமைப்பட்டாலும்

**பிச்சை!**

தாயே! உனக்குக் கோடி புண்ணியம் அம்மா. என் பசியைத் தீர்த்ததம்பி மகாராசாவாய்இருக்கவேண்டும் உங்கள் இரக்கமனதுக்கு இறைவன் எல்லாம் தருவான்.

(பிச்சைக்காரன் போகிறான்)

**தியாக**

அன்பு! சன்டேஸ்கூல் தொடங்க இன்னும் நேரம் இருக்கிறது. கொஞ்சம் நில் நான் செல்லம்மா அக்கா வீட்டுக்குப்போய் தோசைவாங்கிக்கொண்டு வருகிறேன்.

# தன்னையே ஈந்த தனயன்

நாடகம்




சிறுமைப்படக் கூடாது என்று பசித்து எவர் வீட்டுக்கு வந்தாலும் அவர்க்கு உணவு கொடுத்து உவந்தவர் உன் அப்பா. வறியவர்க்கொன்றை ஈவதுதான் சகையில் மிகச் சிறந்தது என அவர் வலியுறுத்திக் கூறுவார்.

(வாசலில் அம்மா பிச்சை என்று யாரோ கூப்பிடுகிறார்கள் தாயும் மகனும்வாசலுக்கு வருகிறார்கள்)

**பிச்சைக்காரன்:**

அம்மா! தாயே! இரண்டு நாட்களாகச் சாப்பிடவில்லை. பசித்தீ வயிற்றில் பற்றி எரிகிறது.

**அன்பு!**

அம்மா! பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. எனது தோசையை நான் கொடுக்கிறேன். (என்று கூறிக்கொண்டே மூன்றுதோசைகளை அன்புடன் கொடுக்கிறான்)

(பட்டினியால் வாடிய பிச்சைக்காரன் அவசர அவசரமாக மூன்று தோசைகளையும் விரைவில் சாப்பிட்டு விட்டு பசி தீராதபடியால் மீண்டும் அதிருப்தியுடன் அன்பரசனைப் பார்க்கிறான்)

**அன்பு!**

குடிக்கத் தண்ணீர்கொண்டு வரட்டுமா ஐயா?

**பிச்சை!**

இன்னும் பசிதீரவில்லையே இராசா!

**தியாக!**

அன்பு! மிகுதியாயிருக்கும் தோசைகளையும் கொண்டு வந்துகொடு. அவர்சாப்பிட்டுப் பசி ஆறட்டும்.

(அன்பரசன் தோசைகளைக் கொடுக்கிறான். பிச்சைக்காரன் ஆவலுடன் அவற்றைப் பெற்றுச் சாப்பிடுகிறான். தியாகவல்லி தண்ணீர்கொண்டு வருகிறார்.)

**அன்பு:**

இந்த தண்ணீரையும் குடியுங்கள் ஐயா

(பிச்சைக்காரன் தண்ணீரைக் குடித்து முடித்ததும் ஏப்பம் விடுகிறான். அகமும் முகமும் மலர தாயையும் தனயனையும் பார்க்கிறான்)

**அன்பு:**

எனக்குப் பசிக்கவே இல்லை அம்மா அந்தப் பிச்சைக்காரனுடைய முகத்தில் தவழ்ந்த ஆனந்தத்தைப் பார்த்தபோது எவ்வளவு மகிழ்ச்சியாய் இருந்தது எனதுபசியே தீர்ந்துவிட்டது

**தியாக;**

ஆம் மகனே! உனது அப்பா அடிக்கடி சொல்லுவார். ஏழைகளின் சிரிப்பிலே இறைவனை காணவேண்டும் என்று. தோசையை விரைவில் வாங்கிக்கொண்டு வருகிறேன் நில்லு கொஞ்சம்.

**அன்பு:**

எனக்கு வேண்டாம் இதோ நான் புறப்படுகிறேன், மதியபோசனம் சாப்பிடலாம் தானே

(அன்பரசன் போகிறான்)

### காட்சி 2

(தியாகவல்லியின் இல்லம் வாசலில் அன்பரசனும் அவன் நண்பன் இயேசுதாசனும் நிற்கிறார்கள் அன்பரசன் கதவைத் தட்டிக்கொண்டு)

**அன்பு:**

அம்மா கதவைத் திறவுங்கோ. இயேசுதாசன் வந்திருக்கிறான்.

**தியாக!**

(கதவைத் திறந்துகொண்டே) தம்பி இயேசுதாசனா? எப்படி அம்மா அப்பா சுகமாக இருக்கிறார்களா?

**இயேசு;**

எல்லோரும் சுகமாக இருக்கிறார்கள் மாமி;

**தியாக;**

எப்போ கொழும்பிலிருந்து வந்தீர்கள்?

**இயேசு:**

நேற்றுத் தான் வந்தோம். இன்னும் பத்து நாட்களுக்கு ஊரில் தான் நிற்போம்.

**தியாக!**

அன்பு! சாப்பாடு தயாராகிவிட்டது. இயேசுதாசனையும் கூட்டிக் கொண்டுவா சாப்பிடலாம்;

**அன்பு:**

அம்மா! என்னை மன்னிக்க வேண்டும். இன்று சன்டேஸ்கூலில் கேக், பிஸ்கட், பழம் தேநீர் எல்லாம் வழங்கினார்கள்.

**தியாக:**

என்ன விசேஷம்! யாருடைய பிறந்த தினம்!

**அன்பு:**

வேறு யாருடையது? எங்கள் இயேசுதாசனுடையது தான். மதிய போசனத்திற்கும் தங்கள் வீட்டிற்கு வருமாறு இயேசுதாசன் அழைக்கிறான்.

**தியாக;**

தம்பி இயேசுதாசனுக்கு எனது அன்பு நிறைந்த பிறந்த தின வாழ்த்துக்கள். நீர் ஒழுக்கத்தோடு கவனமாகப் படித்துப் பட்டம் பெற்று நல்லவனாகவும் வாழ இறைவனை வேண்டுகின்றேன். இன்று சன்டேஸ்கூலில் என்ன நடந்தது?

**இயேசு:**

எங்கள் வணக்கத்துக்குரிய யோன் போதகர் அவர்கள் அழகான சொற்பொழிவு ஆற்றினார். தாம் கண்ட கனவு பற்றி உருக்கமாக உணர்ச்சி பொங்க எடுத்துக் கூறினார்.

**அன்பு:**

ஆம் அம்மா! சொற்பொழிவு அற்புதமாக அமைந்திருந்தது. அந்த அருமையான பேச்சை ரேப்பில் பதியவைத்து இங்கே கொண்டு வந்திருக்கிறான் இயேசுதாசன்.

**இயேசு;**

மாமிக்கு ரேப்பைப் போட்டுக் காட்டுவோமா அன்பு?

**அன்பு:**

அம்மா காலையிலிருந்து இன்னமும் சாப்பிடவில்லை. அம்மா சாப்பிட்டு முடிந்ததும். ரேப்பைப் போடுவோம்

**தியாக:**

அன்பு பேச்சைக் கேட்டுவிட்டு நான் சாப்பிடுவேன் ரேப்பைப் போடுங்கோ (இயேசுதாசன் ரேப்பைப் போடுகிறான் ரேப்பில் பேச்சு ஒலிக்கிறது.)

''அன்புச் செல்வங்களே! அன்புக்கும், இன்பத்திற்கும் ஊற்றுக் கண்ணாக விளங்கும் இறைவனை நாளும் சிந்தனை செய்து வணங்குங்கள். கடவுளின் இராச்சியம் உங்களுக்குள் இருக்கிறது. 'நானும் பிதாவும் ஒன்றே'' என பிதா குமாரன் இயேசு கூறியுள்ளாரே. இறைவன் உறையும் கோயிலாக விளங்கும் எமது உள்ளம் அன்பு மயமாக வேண்டும். அவனியில் அல்லல் படுவோர் நிலை கண்டு அகத்தில் ஈரம் சுரக்கட்டும். அவதிப்படுவோர் அல்லல் நீங்க அள்ளிக்கொடுங்கள். வறியவர்க்கொரு பொருளை கொடுப்பதே ஈகை எனப்படும் மற்றவர்க்கு கொடுப்பதெல்லாம் பலனை எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மை உடையது. இறைகுமாரன் இயேசு, தன்னையே தந்தைக்குஈந்த தனயன் அல்லவா" நான் சென்ற இரவு அற்புதமான கனவொன்று கண்டேன். மனத்தூய்மையுடனும் பூரண அன்புடனும், இறைவனுக்குக் காணிக்கை செலுத்தும் போதுதான் கோயில் மணிதானாகவே ஒலிக்கும் என இறைவன் கூறினார். இன்று பிற்பகல் நன்றி செலுத்தும் ஆராதனை நடைபெறும். அந்நேரம் ஸ்தோத்திரக் காணிக்கை செலுத்தும்போது கோயில்மணி ஒலிக்கிறதா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!

**தியாகவல்லி!**

அன்பு ததும்பும் அழகான பேச்சு.

**அன்பரசன்;**

இன்று பிற்பகல் ஸ்தோத்திரக் காணிக்கை செலுத்தக் கோயிலுக்கு இயேசுதாசனும் செல்வான்; நானும் காணிக்கையுடன் செல்லவேண்டும். காணிக்கையை இப்பவே தந்துவிடுங்கள் அம்மா. இயேசுதாசன் வீட்டிலிருந்துதான் நாம் இருவரும் கோயிலுக்குப் புறப்பட எண்ணியுள்ளோம்.

**தியாக:**

இதோ இரண்டுரூபா மட்டுந்தான் கைவசம் இருக்கிறது. எமது அன்புக் காணிக்கையாக இதை நீ வழங்கு.

### காட்சி 3

பஸ்தரிப்பிடம். ஒருபாட்டி, நிலத்தில் தான்போட்ட நாணயத்தை மண்ணுக்குள் தேடிக்கொண்டிருக்கிறார். கோயிலுக்குப்போக பஸ்ஸில் பயணம்

(10ம் பக்கம் பார்க்க)

1409ம் ஆண்டளவில் இலங்கைக்கு வருகை தந்த சீனமாலுமியான ஷெங்ஹீ என்பார் தமது நினைவாக காலியில் விட்டுச்சென்ற கல்வெட்டில் சீனம் தமிழ் பேர்சியன் மொழிகள் இடம்பெறுகின்றன. சிங்கள மொழியைப் பற்றி எதுவும் இல்லை; இக் கல்வேட்டுப்பற்றிய செய்தி "புதிய பூமி" என்ற பத்திரிகையில் வெளிவந்துள்ளது 'செம்பதாகை'' என்ற பத்திரிகையே நவம்பர் மாதம் முதல்புதியபூமி என்றபெயரில்வெளிவருகின்றது. [ஆ-ரி]

## காலியில் கண்டெடுத்த கல்வெட்டு

15-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் சீனாவின் மாபெரும் மாலுமியான ஷெங்ஹீ Zheng He 1405-1433) தனது 28 வருடங்களில் 27000 வீரர்களைக் கொண்ட கடற் படை ஒன்றுடன் முப்பதுக்கு மேற்பட்ட தென் கிழக்கு ஆசியா, இந்து சமுத்திரம், செங்கடல், ஆபிரிக்காவின் கிழக்குக் கரையோர நாடுகளுக்கும் பிராந்தியங்களுக்கும் பிரயாணம் செய்து சீனாவுக்கும் ஆபிரிக்காவுக்குமான கடல் பாதையை ஆரம்பித்தார். இதனைக்கடல் மார்க்கப் பட்டுப் பாதை என்பர்.

இவரது முதல் முயற்சி அமெரிக்காவை கொலம்பஸ் கண்டு பிடிப்பதற்கு 70 அல்லது 80 ஆண்டுகளுக்கு முற்பட்டது ஷெங்ஹீ இந்து சமுத்திரத்தை 7 தடவைகள் கடந்திருக்கிறார் இவரது கப்பற் படை உலகிலேயே பெரியதென அக்காலத்தில் கணிக்கப் பட்டது.

ஷெங்ஹீயின் கடற் படை சம்பா, ஜாவா, சுமத்திரா இலங்கை முதலிய நாடுகளைக் கண்டு இந்தியாவின் மேற்குக் கரையோரப் பகுதியிலுள்ள கள்ளிக் கோட்டையை அடைந்தது அங்கு நினைவாக கல்வெட்டு ஒன்றை அவர் வைத்துச் சென்றார்.

1409 ல் அவரது இரண்டாவது பயணத்தின் போது இலங்கையில் காலியில் தனது மரியாதையையும் தன்னால் கொடுக்கப்பட்ட அன்பளிப்புகளையும் குறிக்கும் ஒரு கல்வெட்டை வைத்துச் சென்றார் இதன் எழுத்துக்கள் சீனம் தமிழ், பேர்சியன் மொழிகளில் பொறிக்கப்பட்டுள்ளன.

1911 ல் காலியில் அகழ்ந்து எடுக்கப்பட்ட இக் கல்வெட்டு இன்றும் கொழும்பு நூதன சாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. அக்காலத்தில் சீன வணிகக் கப்பல்கள் காலியில் தங்கிப்போவது வழமை.

ஆதாரம்:
China Pictorial No- 11- 1985

## தன்னையே ஈந்த தனயன்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதற்காக அன்பரசனும் இயேசுதாசனும் அவ்விடம் வருகிறார்கள். அன்பரசன் பாட்டியைப்பார்த்து,

அன்பு:

பாட்டி! என்ன தேடுகிறீர்கள்? எதையாவது போட்டு விட்டீர்களா?

பாட்டி;

ஓமடா தம்பி, காசைப் போட்டிட்டன். வசுவுக்குக் கொடுக்கக் கொண்டுவந்த காசு கைவசம்இருந்த இரண்டு ரூபாவையும் தொலைத்துப் போட்டேன்;

இயேசு:

வீட்டுக்குத் திரும்பப்போய் காசை எடுத்துக்கொண்டு வாருங்கோ பாட்டி.

பாட்டி:

வீட்டிலை வேறுகாசு இருந்தாலல்லவோ மோனை. என்ரை மேன் ஆஸ்பத்திரியிலை படுத்திருக்கிறான். கடுமையான வருத்தம். பார்க்கப்போகவேணும். அவசரமாக ஆஸ்பத்திரிக்கு என்னாலை நடக்கவும் ஏலாது. கடவுளே நான் என்னசெய்வேன்.

அன்பு:

பாட்டி நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதேயுங்கோ. இதோ எனது இரண்டு ரூபாவை நான்தாறேன் நீங்கள் ஆஸ்பத்திரிக்குப்போகலாம்.

(எனக் கூறிக் காசைக் கொடுக்கிறான்)

பாட்டி:

உன்ரை நல்ல மனசுக்கு நீ நல்லா இருப்பாய் மோனை.

அன்பு:

இயேசுதாசா! நீயும் ஏதும் பாட்டிக்குக் கொடுத்தால் உதவியாக இருக்குமல்லவா?

இயேசுதாசன்:

கடவுளுக்குக் காணிக்கை செலுத்தத்தான் நான் வைத்திருக்கிறேன். இப்படியானவர்களுக்குக் கொடுக்க அல்ல. உனக்கு ஒன்றுமே தெரியாது. கடவுளுக்குக் காணிக்கை செலுத்தக் கொண்டுவந்த காசைக் கொடுத்துவிட்டாய். காணிக்கைக்கு என்ன செய்யப்போகிறாய்? அதோ பஸ் வருகிறது. கோயிலில் ஆராதனை தொடங்க நேரமாகிறது. வா போவோம்.

(இருவரும் பஸ்ஸில் ஏறிச் செல்கின்றனர்)

காட்சி 4

கோயிலில் ஆராதனை முடிவடைந்து எல்லோரும் தத்தமது காணிக்கையைச் செலுத்திவிட்டுச் சென்றுவிட்டனர். அன்பரசனும் யேசுதாசனும் மட்டுமே நிற்கின்றனர்.

இயேசுதாசன்:

அன்பு! ஆராதனைமுடிந்து எல்லோரும் போய்விட்டார்கள். நாமும் போகலாம் வா.

அன்பு;

நீ விரும்பினால் போ. நான் சிறிது நேரம் கோயிலில் தங்கிவிட்டு வருகிறேன். மன்னிக்கவேண்டும்.

இயேசுதாசன்:

சரி எனக்கு நேரமாகிறது. நான் போகிறேன்.

[இயேசுதாசன் செல்கிறான்]

[கோயிலுக்குள் தனித்திருந்த அன்பரசன் செபம் செய்கின்றான்]

அன்பு;

இறைவா! ஏழை பங்காளா! இங்கு வந்த எல்லோரும் தத்தமதுகாணிக்கையைச் செலுத்தினார்களே! எனது நண்பன் யேசுதாசனும் தனது காணிக்கையைச் செலுத்தினானே. நானோ கருணாமூர்த்தியாகிய உனக்குச் செலுத்தத் தாயார் தந்த அன்புக் காணிக்கையை வழியில் பாட்டிக்குக் கொடுத்துவிட்டேன். என்னிடம் வேறுபொருள் இல்லையே காணிக்கையாகச் செலுத்த நான் என்னசெய்வேன்? ஏழை என்பால் இரங்குவாய்: எல்லாம் வல்லவனே! அன்பின் ஊற்றே! இறைவடிவே! என்னிடம் எதுவும் இல்லை. என்னைத்தான் உன் திருவடியில் தூய அன்புடன் காணிக்கையாக அர்ப்பணித்திட முடியும். இதோ இந்த ஏழையை எளிய பக்தனை ஏற்றுக் கொள் இறைவா!

[அன்பரசன் கண்கள் நீர் சொரிய நிலத்தில் வீழ்கிறான். ஆலய மணி ஒலிக்கிறது]

திரை விழுகிறது

## இராசராசன்

6-ம் பக்கத் தொடர்ச்சி)

கவின் கற்பனையூடாகக் கண்டவை என்று கருதலாம்.

தெய்வத் திருமேனிகளின் அமைப்பை மச்சபுராணம், அக்கினிபுராணம், பிருகத் சங்கிதை முதலிய நூல்கள் கூறுவனவாயினும் ஆகமங்களின் வரிசையில் காமிகம், காரணம், சுப்பிரபேதம், அம்சுகப்பேதம், வைகாசனம் முதலியவை முன்னரே விபரமாகக் கூறியுள்ளன.

தமிழ்நாட்டில் வழங்கிவந்த சிறந்த சிற்ப நூல்களுள் மானசாரம், மயமதம், காசியபீயம், சகளாதிகாரம் என்பன தனிமதிப்புப் பெற்ற நூல்களாகும். சகளாதிகாரம் அகத்திய முனிவர் பெயரால் வழங்குவது சகளம்என்பது உருவம். எனவே உருவத் திருமேனிகள் செய்யும் நுட்பத்தைக் கூறுவது அது. மயமதம் மாமுனியாலும், காசியபீயம் காசியபராலும் செய்யப்பெற்றவையாகும். மேலைச்சாளுக்கிய மன்னன் சோமேசுரன் என்பான் செய்த அபிலஷிதார்த்த சிந்தாமணி உலோகத்திருமேனிகள் செய்யுங்கலையை விளக்குகின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாகக் கலைஞர்கள் அவ்வத்திருவுருவங்களை மனமாரத் தியானிப்பதற்கான தியானசுலோகங்களும் உள்ளன. காலையில் நீராடித் தோய்த்துலர்ந்த ஆடை தரித்து நித்திய கருமஞ் செய்து மனவொடுக்கத்தோடு தெய்வத் திருவுருவைத் தியானித்து வழிபட்டுக் கலைஞர்கள் தங்கள் பணியைமேற்கொள்ள வேண்டும் என்பது விதி.

இராசராசனின் திருக்கோயிற்பணி ஐவரைக் கொண்ட பஞ்சாயத்தார் பொறுப்பிலிடப் பெற்றிருந்தது அந்த ஐவர் சபையின் தலைவனாயிருந்தவன் உத்தம சோழனின் மைந்தனும் கண்டராதித்தரின் பேரனுமான மதுராந்தகக் கண்டராதித்தன் எனபவனுவன்.

## ஹேலி வால் வெள்ளியின்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

க்கப்பட்டிருந்தார். கூட்டத்திற்கு அவர் வர காலதாமதமாகி விட்டது. மக்கள் கலவரப்பட்டனர். அப்பொழுது அம்பலவாணர் எழுந்து சில சைவத் திருமுறைகளைப் பக்தி சிரத்தையுடன் பாடினார். மக்கள் வாயடைத்துப் போய் நின்றனர். அம்பலவாணர் பண்ணிசைத்த முறையை சேர் பொன் இராமநாதன் வானளாவப் புகழ்ந்தார்.

தமது வயலுக்குச் செல்வது அவருடைய நாளாந்தக் கடமைகளில் ஒன்றாக இருந்தது. தொழிலாளிகளுடன் சேர்ந்து உழுவதிலும் விதைப்பதிலும் அறுவடைசெய்வதிலும் ஈடுபட்டார். கிராமத்தின் சாதாரண தொழிலாளிகளுடன் இணைந்து வாழ்ந்து அவர்களின் சுக துக்கங்களில் பங்குகொண்டார். முதலிலக்குச் சமூகத்தில் அங்கத்தவராக விளங்கி காரைதீவிலிருந்த அனைத்துக் கள்ளுக்கடைகளையும் மூடிவிடும்படி செய்தார். கொள்ளையும் அடிதடியும் பலகாலமாகவிருந்த காலத்தில் அன்னாரின் சேவை போற்றப்படவேண்டியதாகும். காரைதீவில் அநேக ஆரம்ப தமிழ்ப் பள்ளிக்கூடங்களை அமெரிக்கன் மிஷனரிமாரைக்கொண்டு தொடங்கினார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கென ஒரு கிணற்றைத் தோண்டவும் அவர்களைத் தூண்டினர்.

அக்கால கட்டத்தில் பிறநாட்டார் யாழ்ப்பாணத்திற் சொற்பொழிவாற்றினால் அவரின் மொழிபெயர்ப்பிலேயே அது சம்பூரணமாகும். ஆங்கிலப் பேச்சிலும் தமிழ்ப் பேச்சிலும் அவர் நிகரற்று விளங்கினர். அவரின் சாதனைகளுக்கு அவரிடத்தே காணப்பட்ட தினசரி ஒழுக்கமும் கட்டுப்பாடுமே காரணமாகும்.

யாழ்ப்பாணக் கல்லூரியிலே அலென், ஹேஸ்டிங்ஸ், ஹிச்கொக், பிறவுண் பிக்னெஸ் என்னும் அதிபர்களின் கீழ் பணியாற்றினார். ஹேஸ்டிங்ஸ் ஹிச்கொக் ஆகியோரின் காலத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி கல்கத்தாப் பல்கலைக் கழகத்துடன் இணைப்புப் பெற்றிருந்தது. அவென் அப்பொழுது கணித ஆசிரியராகவே பணியாற்றி வந்தார்.

(மிகுதி அடுத்தவாரம்)

ARPICO

# இரான்ஸ்லங்கா மாக்கற்றிங் லிமிட்.

இல. 01, நவீன சந்தை மேல் மாடி, யாழ்ப்பாணம்.

1985-ம் ஆண்டு இருப்பெடுத்தலுக்கான கையிருப்பு குறைப்பதற்கான

## மாபெரும் மலிவு விற்பனே!!

சகல பொருட்களுக்கும் 25% விலைக்கழிவு

★ மேசைகள், கதிரைகள், உருக்குக்கதிரைகள்

★ விளையாட்டுச் சாமான்கள், செருப்புகள்

★ மெத்தைகள், இன்னும் பல பொருட்கள்

**TRANSLANKA MARKETING LTD.,**

NO. 01, MODEL MARKET, JAFFNA. Phone: 23027

